ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் (தொடர்-8) பக்கம் 3

துஆக்களை செவியேற்பவன் எனும் பண்பின் ஒளியில் இறையிருப்பு (தொடர்ச்சி...) பக்கம் 7

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐரோப்பிய சுற்றுப் பயணம் (தொடர்-3) பக்கம் 11

ஹுஸீர் உடன் ஒரு சந்திப்பு பக்கம் 18



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | February 2025 | Vol. 4 - Issue No. 3



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311


## உமக்கு ஓர் நற்செய்தி! கம்பீரமான தூய மகன் உமக்கு வழங்கப்படுகிறார். ஒரு தூய குழந்தை உமக்கு கிடைப்பார்...

[இல்ஹாம் - ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) - 20 பிப்ரவரி 1886]





# திருக்குர்ஆன்

وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوْا بِهٖ شَيْـًٔا
وَّبِالْوَالِدَيْنِ اِحْسَانًا وَّبِذِى الْقُرْبٰى
وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ وَالْجَارِ ذِى الْقُرْبٰى
وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ بِالْجَنْۢبِ
وَابْنِ السَّبِيْلِ ۙ وَمَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ؕ
اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ مَنْ كَانَ مُخْتَالًا فَخُوْرَا ۙ

மேலும் நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோர்களுடன் (மிக்க) நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் உறவினர்கள், அநாதைகள், ஏழைகள், உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்கள், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்கள், உங்களுடனிருப்பவர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் வலக் -கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் ஆகியவர்களுடனும் (நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்). கருவங்கொண்டோரை -யும், பெருமையடிப்போரையும் அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை. (4:37)



# ஹதீஸ்

وعنه أن رسول الله صلى الله عليه وسلم قال: " من كان يؤمن بالله واليوم الآخر، فلا يؤذِ جاره، ومن كان يؤمن بالله واليوم الآخر، فليكرم ضيفه، ومن كان يؤمن بالله واليوم الآخر، فليقل خيرًا أو ليسكت"

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்கிறவர் தனது அண்டை அயலாருக்குத் துன்பம் தராமல் இருக்கட்டும். அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்கிறவர் தனது விருந்தினரைக் கண்ணியப் -படுத்தட்டும். அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்கிறவர் நல்லதைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும்." (ரியாதுஸ் ஸாலிஹீன் 310)

# ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்




## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

*தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.*

8

உண்மையான மற்றும் பொய்யான மார்க்கத்திற்கு இடையில் வானத்தில் ஒரு வித்தியாசம் இருக்கிறது; பூமியில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. பூமியில் வித்தியாசம் இருக்கிறது என்பதன் கருத்து, மனிதனுடைய அறிவு, மனிதனுடைய மனசாட்சி, இயற்கைச் சட்டம் ஆகிய அந்த உலகத்தைப் பற்றி விளக்கம் தருகின்ற அந்த வித்தியாசம் ஆகும். எனவே கிறித்தவ மதத்தையும், இஸ்லாம் மார்க்கத்தையும் இந்த உரைகல்லின் அடிப்படையில் ஆய்வு செய்யும்போது, இஸ்லாம் இயற்கை மார்க்கமாகும். அதன் கொள்கைகளில் எந்த செயற்கையும், பகட்டும் இல்லை; அதன் கட்டளைகளில் எந்த செயற்கையான, பகட்டான விஷயமும் இல்லை; வலுக்கட்டாயமாக நம்ப வைக்க வேண்டிய எந்த விஷயமும் இல்லை என்பது தெளிவாக நிருபணமாகின்றது. இதைப் பற்றி இடத்திற்கிடம் இறைவனே கூறுகிறான். திருக்குர்ஆன் இயற்கையைப் பற்றிய எல்லா ஞானங்களையும், அதன் உண்மைகளையும் நினைவூட்டுகிறது. மேலும் அதன் நுண்ணிய இரகசியங்களைத் திறக்கின்றது. மேலும் அதற்கு மாற்றமான எந்த புதிய விஷயங்களையும் எடுத்துக் கூறுவதில்லை. மாறாக, உண்மையில் அதன் நுட்பமான ஞானங்களையே வெளிப்படுத்துகிறது.

இதற்கு மாற்றமாக சுவிசேஷத்தை சான்றாகக் கொண்டு கொடுக்கப்படுகின்ற கிறித்தவர்களின் போதனை ஒரு புதிய இறைவனை எடுத்து வைக்கிறது. அவருடைய தற்கொலை -யால் உலகத்தின் பாவம் மற்றும் தண்டனையிலிருந்து இரட்சிப்பு சார்ந்திருப்பதாகவும், அவர் துக்கத்தை ஏற்றுக் கொள்வதால் படைப்பினங்களின் நிம்மதி சார்ந்திருப்பதாகவும், அவர் கண்ணியமிழப்பதால், அவமானத்திற்கு ஆளாவதால் படைப்பினங்களின் நிம்மதி சார்ந்திருப்பதாகவும் கருதப் -பட்டுள்ளது. பிறகு கூறப்பட்டிருப்பது என்னவெனில், அவன் எத்தகைய விசித்திரமான இறைவன் என்றால், அவனுடைய ஆயுளின் ஒரு பகுதி உடலிருந்தும், உடலின் குறைகளிலிருந்தும் தூய்மையானதாக கழிந்திருக்கிறது. மேலும் ஆயுளின் இன்னொரு பகுதி (ஏதோ அறியாத துர்பாக்கியத்தின் காரணமாக) நிரந்தரமாக உடலைக் கொண்டதும், எல்லைக்குட்பட்டதுமாக இருத்தல் எனும் சிறையில் அடைபட்டு விட்டார். மேலும் அவருடைய ஆவிக்கு மாமிசம், தோல், எலும்பு ஆகியவை அனைத்தும் கட்டாயமாகி விட்டன. மேலும் அந்த உடலைக் கொண்டவராக இருப்பதன் காரணமாக இனி அது எப்போதும் (இயேசு ஆகிய) அவருடன் இருக்கும். மேலும் அவருக்கு எல்லா வகையான துக்கங்களையும் அனுபவிக்க வேண்டியது ஏற்பட்டது. இறுதியில் துக்கங்கள் மேலோங்கியதால் அவர் இறந்து விட்டார்; பிறகு உயிர் பெற்றார். பின்னர் அதே உடல் பிறகு வந்து அவரைப் பிடித்து விட்டது. மேலும் நிரந்தரமாக அவரைப் பிடித்துக் கொண்டவாறு இருக்கும். ஒருபோதும் விடுதலை பெற முடியாது.

இப்போது பாருங்கள். எந்த சரியான இயல்பாவது இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ள முடியுமா? எந்தத் தூய மனசாட்சியாவது இதற்கு சாட்சி பகர முடியுமா? ஒவ்வோர் உலகத்தையும் படைப்பதற்கும், பிறகு அதற்கு இரட்சிப்பைக் கொடுப்பதற்கும் ஒருமுறை மரணிப்பது எப்போதும் அவனுக்குத் தேவைப்படுகிறது என்பது இயற்கைச் சட்டத்தின் ஒரு பகுதியாவது குறையில்லாத, இழப்பில்லாத, மாற்றம் ஏற்படாத இறைவனுக்கு, ஒவ்வோர் உலகத்தைப் படைப்பதற்கும், பிறகு அதற்கு இரட்சிப்பை வழங்குவதற்கும் ஒருமுறை அவன் மரணிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்ற இந்த சம்பவங்களும், ஆபத்துகளும் பொருத்தமானதாக இருக்க முடியுமா? அவன் தற்கொலையைத் தவிர நன்மையை அதிகரிக்கும் தனது எந்தப் பண்பையும் வெளிப்படுத்தவும் முடியாது. தனது படைப்பினங்களை உலகத்தில் அல்லது மறுமையில் எந்த வகையான நிம்மதியைத் தரவும் முடியாது என்று இருக்குமா? தனது அடியார்களுக்கு தனது அருளை இறக்குவதற்காக இறைவனுக்கு தற்கொலை செய்வதற்கான

தேவை இருக்கிறது என்றால், அவனுக்கு மரணம் எனும் விபத்து எப்போதும் ஏற்பட்டுக் கொண்டிருப்பதும், இதற்கு முன்னரும் அவன் எண்ணற்ற மரணங்களின் சுவையை சுவைத்திருப்பதும் கட்டாயமாகிறது என்பது வெளிப்படை -யானதாகும்.

மேலும் இந்துக்களின் பரமேசுவரனைப் போன்று பண்புகளை அவன் இழந்து விட்டவனாக இருப்பது கட்டாயமாகிறது. இப்போது நீங்களே சிந்தியுங்கள். தற்கொலை இல்லாமல் தனது படைப்பினங்களை ஒருபோதும், எந்தக் காலத்திலும் எந்த நன்மையையும் கொடுக்க இயலாது என்ற இப்படிப்பட்ட பலவீனமானவன், இயலாமையுள்ளவன் இறைவனாக இருக்க முடியுமா? இந்த பலவீனமான, ஆற்றல் இல்லாத நிலை என்பது முழுமையான ஆற்றலைக் கொண்ட இறைவனுக்கு பொருத்தமானதா என்ன? பிறகு கிறித்தவர் -களின் இறைவனுடைய மரணத்தின் விளைவைப் பார்ப்பீர்கள் என்றால் அது ஒன்றுமே அல்ல. அவர்களின் இறைவனுடைய உயிர் போய் விட்டது. ஆனால் ஷைத்தானின் இருப்புக்கும், அவனுடைய செயலுக்கும் எந்தத் துன்பமும் ஏற்படவில்லை. முன்னர் இருந்தவையும், இப்போது இருக்கின்றவையுமான அதே ஷைத்தானும், அவனது அதே சதிகளும் இப்போதும் இருக்கின்றன. திருட்டு, கொள்ளை, விபச்சாரம், கொலை, பொய் கூறுவது, மது அருந்துவது,★ சூதாட்டம், உலக வணக்கம், ஈமான் அற்ற நிலை, நிராகரிப்பு, இறைவனுக்கு

★பிரித்தானிய அரசாங்கத்தில் ஒவ்வோர் ஆண்டும் பதிமூன்று கோடியே அறுபது ஆயிரம் (13,00,60,000) பவுண்டு மது அருந்துவதிலும், மது விற்பனையிலும் செலவாகிறது என்று பத்திரிகைகளிலிருந்து தெரிய வந்திருக்கிறது. மேலும் (M.A எனும் ஓர் எழுத்தாளரின் குறிப்பு என்னவெனில்,) மதுவினால் இலண்டனில் நூற்றுக்கணக்கானவர்களின் தற்கொலை சம்பவங்கள் நடந்து விடுகின்றன. குறிப்பாக இலண்டனின் மக்கள் தொகையான முப்பது இலட்சம் பேரில் பத்தாயிரம் பேர் மது அருந்தாமல் இருக்க மாட்டார்கள். (இந்த நூல் 1892-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. அன்றைய நிலவரப்படி, இலண்டனின் மக்கள் தொகை முப்பது இலட்சம் என்ற இந்த எண்ணிக்கைகளைக் கூறுகிறார்கள் - மொழிபெயர்ப்பாளர்). இல்லையென்றால், எல்லா ஆண்களும், பெண்களும் சுதந்திரமாக மதுவை அருந்துகிறார்கள்; அருந்தக் கொடுக்கிறார்கள். எல்லாவற்றையும் விட முதன்முதலில் பிராந்திக்கும், சிவப்பு மதுவுக்குமான ஏற்பாடு செய்யப்படாத எந்த மாநாடும், கூட்டமும் இலண்டனில் இல்லை. மது ஒவ்வொரு மாநாட்டின் மிகப் பெரிய பங்காகக் குறிப்பிடப்படுகிறது. வியற்பிற்குரியது என்னவெனில், இலண்டனின் மாபெரும் கிறித்தவ மத அறிஞர்கள், பாதிரிமார்கள் கூட மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று அழைக்கப்படுபவர்களாக இருந்தாலும் மது அருந்துவதில் முதல் தரமாக இருக்கின்றனர். எத்தனை மாநாடுகளில் (எழுத்தாளர் M.A ஆகிய) எனக்கு மிஸ்டர் நிகோலெட் (Nikolet) என்பவர் மூலமாக கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தோ அவை அனைத்திலும் கண்டிப்பாக இளம் வயதைக் கொண்ட இரண்டு, நான்கு பாதிரிகள், ரெவரெண்டுகள் (Reverent) கலந்து கொண்டதைப் பார்த்தேன். இலண்டனில் மது அருந்துவது எந்தத் தீமையின் வகையைச் சேர்ந்ததாகவும் கருதப்படவில்லை. எதுவரை என்றால், மது அருந்துவது பகிரங்கமாக சூடுபிடித்திருக்கிறது. அமளி நிறைந்த இலண்டனில் பெரும்பாலான ஆங்கிலேயர்களை போதையுடையவர் -களாக வீதிகளில் அலைவதை நானே பார்த்திருக்கிறேன். கையில் மது பாட்டில் இருக்கின்றது. அவ்வாறே இலண்டனில் பெண்கள் கையில் பீர் பாட்டில்களைப் பிடித்தவாறு தள்ளாடிக் கொண்டு அலைவதையும் பாரத்தேன். அதிகமான மக்கள் மதுவினால் சுய நினைவை இழந்தவாறும், போதையுடையவர்களாகவும், நல்ல மனிதர்கள், நாகரிகமானவர்கள் வீதிகளில் வீழ்ந்து கிடைப்பதைப் பார்த்திருக்கிறேன். மது அருந்துவதன் காரணத்தால் இலண்டனில் எந்த அளவுக்கு தற்கொலை சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன! ஒவ்வோர் ஆண்டும் அவற்றின் நாசமாக்கும் தண்டனை ஏற்படுகிறது. (1, பிப்ரவரி 1883. ரஹ்பரே ஹிந்த் பத்திரிகை, லாஹூர்.)

அவ்வாறே இலண்டனில் பொதுவான விபச்சாரம் பற்றியும், ஏறக்குறைய எழுபதாயிரம் விபச்சாரக் குழந்தைகள் ஒவ்வோர் ஆண்டும் பிறப்பதைப் பற்றியும் ஒருவர் குறிப்பிட்டவாறு, அந்த மக்களின் மானக்கேடான செயல்களைப் பற்றி எழுதியிருக்கிறார். அவற்றை தெளிவாக எழுதுவதற்கு (கூச்சத்தால்) எழுதுகோல் நின்று விடுகிறது. ஐரோப்பாவின் முதல்தரமான நாகரிகமுள்ளவர்கள், கல்வியறிவு பெற்றவர்கள் ஆகியோர் பத்து பகுதியாகப் பிரிக்கப்பட்டால், அவற்றில் ஒன்பது பகுதி சந்தேகமின்றி இறை மறுப்பாளர்களாக இருப்பார்கள். அவர்கள் மார்க்கத்திற்குக் கட்டுப்படுதல், இறைவனை ஏற்றுக் கொள்ளுதல், நற்கூலி மற்றும் தண்டனையைப் பற்றிய கொள்கையை விட்டு விட்டவர்களாக இருக்கின்றனர் என்றும் சிலர் இருக்கின்றனர். மேலும் இறைமறுப்பின் இந்த நோய் நாளுக்கு நாள் ஐரோப்பாவில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பிரித்தானிய அரசாங்கத்தின் பரந்த உள்ளம் இ(ந்த நேர்மையான)து முன்னேறுவதால் கொஞ்சமும் வெறுப்படையவில்லை எனத் தெரிகிறது. எதுவரையென்றால், சில உறுதியான இறைமறுப்பாளர்கள் பாராளுமன்ற நாற்காலியிலும் அமர்ந்து விட்டனர். கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. அந்நிய மக்களுக்கு, இள வயதுப் பெண்களுக்கு முத்தம் கொடுப்பதை ஆகுமானது என்பது மட்டுமில்லாமல், ஐரோப்பாவின் புதிய நாகரிகத்தில் ஓர் அழகிய செயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் எந்தப் பெண்ணும் சரியாக இளம் வயதாக இருக்கும் நாட்களில் எந்த அந்நிய ஆணுக்கும் முத்தம் கொடுக்காத அப்படிப்பட்ட ஒரு பெண்ணும் இருக்கிறார் என்று எவரும் வாதிட்டுக் கூற முடியாது. உலக ஆசை எந்த அளவுக்கு இருக்கிறதென்றால், மாவீரன் அலெக்ஸாண்டர் (எனது பெயரில் அனுப்பியிருக்கும்) கடிதத்தில், இந்த நாட்டில் காணப்படுகின்ற எல்லா நாகரிகமுள்ளவர்களில், கல்வியறிவுள்ளவர்களில் ஒருவரின் பார்வை கூட மறுமையின் பக்கம் இருப்பதாக எனது பார்வையில் இல்லை. மாறாக, எல்லா மக்களும் தலையிலிருந்து கால் வரை உலக வணக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்என்று எழுதுகிறார்.

இப்போது இந்த எல்லா கூற்றுகளிலிருந்தும், பாதிரிமார்கள் இந்தியாவிற்கு வந்து அப்பாவியான மக்களுக்கு இயேசு தியாகமான அந்த தாக்கங்களைப் பற்றி எடுத்துக் கூறுவது முற்றிலும் பாதிரிமார்களின் இட்டுக்கட்டு ஆகும் என்பது தெளிவாகிறது. உண்மை என்னவென்றால், பாவமீட்புக் கொள்கையை ஒப்புக் கொண்டு கிறித்தவர்களின் இயல்புகள் எதன் பக்கம் தலைகீழாகப் புரண்டதோ அது, அவர்களிடம் மது அருந்துவது அதிகமாகப் பரவி விட்டது. விபச்சாரமும், தீய பார்வையும் தாய்ப்பாலாகக் கருதப்பட்டது. சூதாட்டம் எல்லை மீறிப் போய் விட்டது என்பதும், இறை வணக்கத்தை உண்மையான உள்ளத்துடன் செய்வது, உண்மையின் பக்கம் முற்றிலும் திரும்புவது ஆகிய இவை அனைத்தும் இல்லாமற்போய் விட்டது என்பதுதான்.

எனினும் ஏற்பாட்டளவில் உள்ள நாகரிகம் என்பது சந்தேகமின்றி ஐரோப்பாவில் காணப்படுகிறது. அதாவது, ஒருவருக்கொருவர் திருப்தியாக இருப்பதற்கு எதிராக இருக்கும் பாவங்களான வழிப்பறிக் கொள்ளை, கொலை, பலவந்தமான விபச்சாரம் ஆகியவை. அவற்றை செய்வதை அரசாங்க சட்டங்கள் நாட்டின் நலனுக்காக தடுத்திருக்கின்றன. சந்தேகமின்றி அவற்றிற்கான தடை இருக்கின்றது. ஆனால் அந்தப் பாவங்களின் தடைக்கான காரணம், மஸீஹின் பாவமன்னிப்புக் கொள்கையின் தாக்கம் ஏற்பட்டது என்பது அல்ல. மாறாக, சட்டங்களைப் பற்றிய அச்சமும், சமூகத்தின் அழுத்தமும் இந்தத் தாக்கத்தை உருவாக்கி இருக்கிறது. இந்தத் தடைகள் இடையில் இல்லாமல் இருந்தால் இந்த கிறித்தவப் பெரியவர்கள் எல்லாவற்றையும் கடந்து சென்று விட்டிருப்பார்கள். பிறகு இந்தக் குற்றங்களும் மற்ற நாடுகளைப் போன்று ஐரோப்பியாவிலும் நடந்து கொண்டுதானே இருக்கின்றன! முற்றிலும் தடுக்கப்படவில்லையே!! - நூலாசிரியர்.

இணை வைத்தல், இறைமறுப்புத் தன்மை மற்றும் மஸீஹின் சிலுவை சம்பவத்திற்கு முன்பு இருந்த நூற்றுக்கணக்கான குற்றங்கள் இப்போதும் அதே அழுத்தத்துடன் இருக்கின்றன. இன்னும் கூறுவதென்றால், பரவலாகவும், அதிகமாகவும் இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, பாருங்கள். கிறித்தவர்களின் இறைவன் உயிருடன் இருந்த காலத்தில் கிறித்தவர்களின் நிலைமை நன்றாக இருந்தது. அந்த இறைவன் மீது எப்போது பாவ விமோசனம் என்று கூறப்படுகின்ற மரணம் ஏற்பட்டதோ




அப்போதிலிருந்துதான் அந்த சமுதாயத்தின் வாகனத்தின் மீது ஷைத்தான் வினோதமாக ஏறி அமர்ந்து விட்டான். மேலும் கட்டுப்படாமை, மனயிச்சையை வணங்குதல் ஆகியவற்றின் ஆயிரக்கணக்கான வாசல்கள் திறந்து விட்டன. கிறித்தவ மக்களே இதை ஒப்புக் கொள்கின்றனர். 'மீஸானுல் ஹக்' என்ற நூலை எழுதிய பாதிரி ஃபின்டர் (Finder) என்பவர், கிறித்தவர்களின் அதிகப்படியான பாவங்கள், அவர்களின் உட்புறமான தீய நடத்தைகள், தீமையும், வரம்பு மீறுதலும் பரவியது ஆகியவற்றின் காரணமாகத்தான், கிறித்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பதற்காகவும், எச்சரிப்பதற்காகவும் முஹம்மது (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள் என்று கூறுகிறார். எனவே மஸீஹ் சிலுவையில் அறையப்பட்ட பின்னரே கிறித்தவர்களிடம் அதிகமான பாவங்கள், குற்றங்களுக்கான சூறாவளிக் காற்று வீசியது என்பது இந்த சொற்பொழிவுகளிலிருந்து தெளிவாகிறது. மஸீஹ் இறப்பது என்பது அவரது இறப்பினால் பாவத்தின் வேகம் சற்று குறையும் என்ற நோக்கத்திற்காக இருந்ததில்லை என்பது இதிலிருந்து நிரூபணமாகின்றது.

எடுத்துக்காட்டாக, அவர் மரணிப்பதற்கு முன்னர் மக்கள் அதிகமாக மது அருந்தி வந்தார்கள் என்றால், அதிகமாக விபச்சாரம் செய்து வந்தார்கள் என்றால் அல்லது உறுதியாக உலகவாதிகளாக இருந்தார்கள் என்றால், மஸீஹின் மரணத்திற்குப் பிறகு இந்த எல்லாவிதமான பாவங்கள் நீங்கி விட வேண்டும். ஏனெனில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் எந்த அளவுக்கு இப்போது மது அருந்துதல், உலக சுகபோகம், விபச்சாரம் ஆகியவை அதிகமாகி இருக்கின்றனவோ அதற்கு சான்று தேவை இல்லை. மஸீஹின் மரணத்திற்கு முன்னர் தீமை மற்றும் வரம்பு மீறுதல் ஆகியவற்றின் இதே சுழல் காற்று வீசிக் கொண்டிருந்தது என்பதை எந்த அறிவாளியும் ஒருபோதும் கருத முடியாது. மாறாக, இதில் ஆயிரத்தில் ஒரு பகுதி கூட நிரூபணமாக முடியாது. மேலும் யூதர்களின் கையில் பிடிபட வேண்டும் என்றும், கொல்லப்பட வேண்டும் என்றும், சிலுவையில் அறையப்பட வேண்டும் என்றும் மஸீஹ் (அலை) அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை என்பது சுவிசேஷங்களைப் பற்றி சிந்தித்து முழு தெளிவுடன் வெளிப்பட்டு விடுகிறது. ஏனெனில் இதே விருப்பமாக இருந்திருந்தால், மேலும் அழுது அழுது, அப்பா! பிதாவே!! எல்லாம் உம்மாலே கூடும் இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடும் என்று அந்தத் துன்பத்தை நீக்குவதற்காக இரவு முழுவதும் ஏன் அழுது கொண்டிருந்தார்?★

இன்னும் கூறுவதென்றால், இயேசு தனது விருப்பம் இல்லாமல், எதிர்பாராத வகையில் பிடிக்கப்பட்டார். மேலும் அவர் இறக்கும் வரை அழுது அழுது, 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னை கைவிட்டீர்?' என்ற பிரார்த்தனையையே செய்தார். (மத்தேயு 27:46 காண்க - மொழிபெயர்ப்பாளர்). மஸீஹ் உயிருடன் இருக்கவும், இன்னும் சில நாட்கள் உலகில் நிலைபெற்றிருக்கவும் விரும்பி இருந்தார் என்றும், எப்படியாவது தனது உயிர் தப்பித்து விட வேண்டும் என்று அவரது ஆன்மா நிம்மதியற்ற நிலையில் துடித்துக் கொண்டிருந்தது என்றும் இதிலிருந்து தெளிவாக நிரூபணமாகின்றது. ஆனால் அவரது விருப்பம் இல்லாமல், (உலகத்தை விட்டுப் பிரியும்) இந்தப் பயணம் அவருக்கு ஏற்பட்டு விட்டது. மேலும் கிறித்தவர்கள் கருத்து தெரிவித்திருப்பதைப் போன்று, இவ்விதமாக மரணிப்பதால் இயேசுவுக்கு என்ன கிடைத்தது? மேலும் இதனால் சமுதாயத்திற்கு என்ன பயன் கிடைத்தது என்பதும் கவனிக்க வேண்டிய இடமாகும்.

அவர் உயிருடன் இருந்திருந்தால், அவர் தனது சமுதாயத்தில் மாபெரும் சீர்திருத்தங்களைச் செய்து காட்டி இருப்பார். அவர் மாபெரும் குறைகளை அவர்களிடமிருந்து அகற்றிக் காட்டியிருப்பார். ஆனால் அவருடைய மரணம் எதைச் செய்து காட்டியது? பொருத்தமற்ற காலத்தில் அவர் மரணித்ததால் நூற்றுக்கணக்கான குழப்பங்கள் உருவாயின. மேலும் எப்படிப்பட்ட மோசங்கள் நடைபெற்றனவென்றால், அவற்றின் காரணமாக ஓர் உலகம் நாசமாகி விட்டது. இதைத் தவிர வேறு என்ன நடந்தது? வீரத்தைக் கொண்ட மக்கள் சமுதாயத்தின் நன்மைக்காக தமது உயிரையும் அர்ப்பணித்து விடுகின்றனர். அல்லது சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்காக உயிரை அழிவில் மாய்த்துக் கொள்கின்றனர் என்பது உண்மையாகும்.

ஆனால் மஸீஹைப் பற்றி கூறப்படுவது போன்று வீணான, முட்டாள்தனமான முறையில் அல்ல. மாறாக, எவர் அறிவுப்பூர்வமான முறையில் சமுதாயத்திற்காக உயிரைக் கொடுக்கின்றாரோ அல்லது உயிரை அழிவுக்குள்ளாக்கி விடுகிறாரோ அவர் அறிவுப்பூர்வமானதும், விரும்பத்தக்கதும்,

★"எல்லாம் உம்மாலே கூடும் இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்". (மாற்கு 14:36 லூக்கா 22:42 மத்தேயு 26:39 ஆகியவற்றைக் காண்க - மொழிபெயர்ப்பாளர்).

பயன்படக் கூடியதும் ஆகிய தெளிவான பயனளிக்கக் கூடிய முறைகளில் ஒரு மிக உயர்ந்த, மிகத் தெளிவான, எல்லாவற்றையும் விட அதிக பயனளிக்கக் கூடிய அர்ப்பணமாகும் வழியை மேற்கொள்கின்றார். அந்த வழியை பயன்படுத்துவதால் அவருக்கு துன்பம் ஏற்பட்டாலும் அல்லது உயிரே போனாலும் சரியே! ஆனால் அவருடைய சமுதாயம் சில சோதனைகளிலிருந்து உண்மையிலேயே தப்பித்து விட வேண்டும். தூக்கில் தொங்கி அல்லது விஷத்தை உண்டு அல்லது ஏதாவது ஒரு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்வது, பிறகு தனது தற்கொலை, சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கும் என்று நினைத்தால், அப்படிப்பட்ட செயல் பைத்தியக்காரர்களின் வேலையாகும். இது அறிவாளியின், மார்க்கவாதியின் வேலை அல்ல. இன்னும் கூறுவதென்றால், இந்த மரணம் ஹராமான (தடுக்கப்பட்ட) மரணம் ஆகும். மேலும் கடும் அறிவிலிகள் மற்றும் முட்டாள்களைத் தவிர வேறு எவரும் அதை நாடுவதில்லை. முழுமையான, உறுதிமிக்க மனிதன் பலரை காப்பாற்றுவதற்காக ஏதாவது அறிவுப்பூர்வமான, சரியான வழிமுறையில் மரணித்தே ஆக வேண்டும் என்ற அந்த குறிப்பிட்ட நிலையைத் தவிர அது ஒன்றும் சமுதாயத்திற்கு நல்லதல்ல என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். மாறாக, அது பெரிய துன்பத்திற்கும், ஒப்பாரிக்குமான நேரமாகும். எந்த மனிதரிடமிருந்து அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு பலவிதமான பயன் கிடைத்துக் கொண்டிருக்கிறதோ, அவர் தற்கொலை செய்ய எண்ணினால், அவர் இறைவனின் கடும் பாவி ஆவார். மேலும் அவரது பாவம் மற்ற குற்றவாளிகளை விட அதிகமானதாகும்.

எனவே ஒவ்வொரு முழுமையானவரும் தனக்காக படைப்பாளனிடம் நீண்ட ஆயுளை வேண்டுவது அவசியமாகும். அப்போது அவர் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்காக அவருடைய உள்ளத்தில் இடப்பட்டுள்ள எழுச்சி, அந்த எல்லா வேலைகளையும் நன்றாக செய்ய முடியும். ஆயினும் தீயவர்களின் கூடாரம் அதிகமாகிக் கொண்டே சென்று விடக் கூடாது என்பதற்காகவும், அதன் ஒவ்வொரு நாளின் குழப்பத்திலிருந்து அல்லாஹ்வின் படைப்பினம் அழிந்து விடக் கூடாது என்பதற்காகவும் தீயவர் இறப்பது அவருக்கும், இறை படைப்பினங்களுக்கும் சிறந்ததாகும்.

எல்லா இறைதூதர்களிலும் சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்காக இறைவனின் கம்பீரத்தை வெளிப்படுத்து -வதன் நோக்கத்தில் அறிவுப்பூர்வமான வழிமுறைகளுடன் அவசியமான நிலைமைகளின் காலத்தில் எந்த இறைத் தூதர் அதிகமாக தன்னை வருத்தத்திற்குள்ளாக்கினார்? சமுதாயத்திற்காக தன்னை அர்ப்பணிக்க விரும்பினார்? மஸீஹா? அல்லது வேறு யாராவது நபியா? அல்லது நமது தலைவரும், எஜமானரும் ஆகிய முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களா என்ற கேள்வி கேட்கப்பட்டால், அதற்கான விடை, எத்தகைய உணர்ச்சிப்பூர்வமாகவும், ஒளிமிக்க சான்றுகளினாலும், தெளிவான அடையாளங்களினாலும், வரலாற்று சான்றினாலும் எனது நெஞ்சில் நிரம்பி இருக்கிறதோ அது மிகவும் நீண்டதாகும் என்பதாலும், இந்த சிறிய கட்டுரை அதற்கு இடம் தராது என்பதாலும், அதை இந்த இடத்தில் எழுதுவதை வருத்தத்துடன் விட்டு விடுகிறேன். (எனது) வயது நன்றியுணர்வு காட்டினால் (அதாவது நான் உயிரோடு இருந்தால்) இது தொடர்பாக ஒரு நிரந்தரமான பத்திரிகையை எழுதுவேன் - اِنْشَاءَ اللهُ اَلْقَدِيْرُ (இன்ஷா அல்லாஹுல் கதீர். - மிகவும் ஆற்றல் கொண்ட அல்லாஹ் விரும்பினால்). ஆனால் சுருக்கமாக இந்த இடத்தில் நற்செய்தி கூறுகிறேன். சமுதாயத்திற்காகவும், எல்லா மனித இனத்திற்காகவும் தனது உள்ளத்தை அர்ப்பணிக்கக் கூடிய முழுமையான நபர் நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

سَيِّدُنَا وَمَوْلَانَا وَحِيْدُنَا وَفَرِيْدُنَا اَحْمَدُ مُجْتَبٰى مُحَمَّدٌ مُصْطَفٰى الرَّسُوْلُ النَّبِيُّ
الْاُمِّيُّ الْعَرَبِيُّ الْقُرَيْشِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

(அதாவது நமது தலைவரும், எஜமானரும், நம்முடைய ஒரே ஒருவரும், நமது தனித்தவரும், அஹ்மது முஜ்தபா, முஹம்மது முஸ்த.ஃபா ரஸூலுந் நபிய்யுல் உம்மியுல் அரபிய்யுல் குறைஷீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.)

(தொடரும்...)

# ஹஸ்ரத் முஹம்மத்
## ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது திறமையினால் அல்லாமல் முழுக்க முழுக்க இறைவனின் அருளால் எனக்கு முன்னர் வந்திருந்த நபிமார்கள், தூதர்கள் மற்றும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இந்த அருளிலிருந்து முழுமையான பங்கைப் பெற்றுள்ளேன். நான் எனது தலைவரும் எஜமானரும் நபிமார்களின் பெருமையும் படைப்பினங்களில் சிறந்தவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் வழிகளைப் பின்பற்றிச் செல்லாமல் இருந்தால் எனக்கு இந்த அருளைப் பெறுவது சாத்தியமற்றதாகும். எனவே, நான் எதையெல்லாம் பெற்றுக் கொண்டேனோ அதனை இந்தப் பின்பற்றுதல் மூலமே பெற்றுக் கொண்டேன். எந்தவொரு மனிதனும் அந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்களைப் பின்பற்றாமல் இறைவனை அடைய முடியாது. மேலும் முழுமையான இறை ஞானத்தின் பங்கைப் பெற முடியாது என்பதை நான் எனது உண்மையான முழுமையான அறிவின் மூலமாக அறிந்துள்ளேன்.

(ரூஹானி கஸாயீன் தொகுதி 22, ஹகீகத்துல் வஹீ பக்கம் 62-65)

# துஆக்களை செவியேற்பவன் எனும் பண்பின் ஒளியில் இறையிருப்பு

மவ்லவி முஹம்மத் ஹமீத் கவ்ஸர் ஸாஹிப் (Nazir Dawate ilallah Shumali Hind Qadian)

தமிழாக்கம்: இப்னு வஸீம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபுக் கல்வியை எந்தவொரு கல்லூரியில் இருந்தோ பல்கலைக்கழகத்திலிருந்தோ பெற்றிருக்கவில்லை. மாறாக, ஹுஸூர் (அலை) அவர்கள் சிறு வயதில் அரபு இலக்கணத்தின் சில நூல்களை ஓர் ஆசிரியரிடம் கற்றார்கள். இது போக, ஹுஸூர் (அலை) அவர்கள் எந்த அரபுக் கல்வியும் கற்றிருக்கவில்லை. அல்லாஹ் ஹுஸூர் (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியாகவும், உம்மத்தி நபியாகவும், ரஸூலாகவும் ஆன்மிக அந்தஸ்த்தில் நிலைத்திருக்கச் செய்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் உருதுவிலும் ஃபார்ஸீயிலும் நூல்கள் எழுதத் துவங்கினார்கள். 1893 இல் ஹுஸூர் (அலை) அவர்கள் ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் நூலை எழுதிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் இந்த நூலின் சில பகுதிகளை அரபு மொழியில் எழுதுமாறு கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் எளிமையாகவும், அப்பாவித்தனமாகவும், ‘எனக்கு அரபு தெரியாது’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிரா குகையில், ما انا بقارئ அதாவது, எனக்குப் படிக்கத் தெரியாது என்று ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு அளித்த பதிலில் இருந்த அதே பொலிவு இந்தப் பதிலில் இருந்தது. இதைக் கேட்ட ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள், ‘ஹுஸூர் அவர்களுக்கு அரபு தெரியும் என்று நான் எங்கு கூறுகிறேன். தாங்கள் தூர் மலைக்கு சென்று அங்கிருந்து ஏதேனும் கொண்டு வாருங்கள் என்று கூற விரும்புகிறேன்’ என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ‘நான் துஆ செய்வேன்’ என்று கூறினார்கள்.

துஆக்களை செவியேற்பவனான இறைவன் ஹுஸூர் (அலை) அவர்களின் துஆவை ஏற்றுக் கொண்டான். ஹுஸூர் (அலை) அவர்கள் தமது நூலான அஞ்சாமே ஆத்தமில் இவ்வாறு கூறுகிறார்கள்: علمت اربعين من اللغات العربية பொருள்: எனக்கு 40 ஆயிரம் அரபு அகராதி சொற்கள், அதாவது, மூலச்சொற்கள் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு ஏறக்குறைய 20 அரபு நூல்களை இயற்றினார்கள். சூரா ஃபாத்திஹா விளக்கவுரை அரபு மொழியில் இயற்றினார்கள். மேலும், தமது நூலான இஃஜாஸுல் மஸீஹில் மிகவும் அறுதியிட்டு அறிவிப்பு செய்தார்கள்.




“அன்னாருக்கு நிகராக உலகம் முழுவதிலும் உள்ள அறிஞர்கள், மார்க்கச் சட்டம் பயின்றவர்கள், சிறியவர் பெரியவர் அனைவரும் ஒன்று திரண்டு இது போன்ற விளக்கவுரை எழுத விரும்பினால் அவர்களால் ஒருபோதும் எழுத முடியாது.” (அஹ்மதிய்யத்தின் வரலாறு தொகுதி 2, பக்கம் 168)

பிறகு, நவம்பர் 15, 1902 இல் ஹுஸூர் (அலை) அவர்கள் இஃஜாஸே அஹ்மதி எனும் நூலை வெளியிட்டார்கள். அதில் உருதுக் கட்டுரை மட்டுமின்றி, லுத் விவாதம் தொடர்பாக 533 கவிதைகளை அரபு மொழியில் இயற்றினார்கள். பிறகு, “நான் இந்த நூல்களை 533 அரபுக் கவிதைகளை வெறும் 5 நாள்களில் எழுதியுள்ளேன். எதிரி அறிஞர்கள் 12 நாள்களில் இத்தகைய கஸீதாக்களை எழுதினால், தயக்கமின்றி 10 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கொடுத்து விடுவேன்.” என்று கூறினார்கள். 122 ஆண்டுகள் கழிந்து விட்டன. எவரும் பதில் எழுதத் துணியவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோ மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களிடம், ‘எனக்கு அரபு தெரியாது. நான் துஆ செய்வேன்’ என்று கூறினார்கள்.

கேள்வி என்ன எழுகிறது என்றால், துஆக்களை செவியேற்பவனான இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு 40 ஆயிரம் மூலச் சொற்களைக் கற்றுக் கொடுக்கவில்லை என்றால், பிறகு இந்த வினைச் சொற்களை ஹுஸூர் (அலை) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது யார்? பிறகு, எப்படி ஹுஸூர் (அலை) அவர்கள் அரபு மொழியில் கருத்துச் செறிவுமிக்க நூல்களையும் கவிதைகளையும் இயற்றினார்கள்? ஹுஸூர் (அலை) அவர்கள் இப்படிக் கூறியுள்ளது உண்மையே:

வல்லமையின் மூலம் தனது இருப்பிற்கான சான்றை அந்த உண்மையானவன் அளிக்கிறான். அடையாளமற்ற அவன் இப்படித்தான் தனது முகத்தைக் காட்டுகிறான்.

இந்த நிகழ்விலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு ஏற்ப அல்லாஹ்வைப் பற்றிய ஞானம், அவனை அடையாளம் கண்டு கொள்ளுதல், அவன் வரை எட்டுதல், அவனை சென்றடைதல் குறித்து எந்த வழிகளையும், வழிமுறையையும் எடுத்துக் கூறுகிறதோ அது முற்றிலும் உண்மையானது; சரியானது என்பது ஆயிரக்கணக்கான அஹ்மதி மக்களின் அனுபவத்தால் நிரூபணமாகிறது.

அதை மேற்கொண்டு இன்றும் ஒவ்வொரு மனிதனும் துஆக்களை செவியேற்பவனான இறைவன் முன்னிலையில் துஆக்கள் செய்து அவனது இருப்பை அடையாளம் கண்டு கொள்ள முடியும். மேலும், தனது ஈமானை வலுபடுத்திக் கொள்ள முடியும்.



ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ராஜேக்கீ சாஹிப் அவர்கள் தமது ஒரு நிகழ்வை எடுத்துக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் மவ்லானா சாஹிப் அவர்கள் காதியானில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்தித்த பிறகு தமது கிராமத்துக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் கப்பல் மூலமாக சனாப் நதியைக் கடப்பதற்காக கரையை அடைந்தபோது, கப்பல் மாலுமி வானிலையின் காரணத்தினால், கப்பல் ஓட்ட மறுத்து விட்டார். ஆனால், ஒரு திருமண வீட்டார் வற்புறுத்தியதனால் அவர் கப்பல் ஓட்ட ஆயத்தமாகி விட்டார்.

ஹஸ்ரத் மவ்லானா சாஹிப் அவர்களும் அவர்களுடன் கப்பலில் ஏறிக் கொண்டார்கள். கப்பல் நதிக்கு நடுவில் சென்று சேர்ந்தது, சூரியன் மறைய இருந்த போது புயல் வீசத் துவங்கியது. அதனால் மாலுமி, ‘இறைவனைத் தவிர யாராலும் உங்களைக் காப்பாற்ற முடியாது’ என்று கூறினார். நதி சலசலத்துக் கொண்டிருந்தது. கப்பலில் ஏறியிருந்த மக்கள் அனைவரும் நம்பிக்கையிழந்த நிலைமையைக் கண்டதும், அப்பொழுது எல்லாரும் தங்களையும் அறியாமல், ‘பீர் புகாரீ அவர்களே! .்.ஹாஜா .்.ஹிஸ்ர் அவர்களே! பீர் ஜீலானீ அவர்களே!’ என்று கத்த ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், சூழ்நிலை மாறவில்லை.

ஹஸ்ரத் மவ்லானா சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அந்த மக்கள் அழுது புலம்புவதைக் கண்டதும் நானும் அப்பொழுது துஆ செய்யத் துவங்கி விட்டேன். என்னிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில நூல்கள் இருந்தன. எனவே, நான் இறைவன் முன்னிலையில் அந்த நூல்களை முன்னிறுத்தி இவ்வாறு துஆ செய்தேன்: “கருணையுள்ள இறைவா! நாங்கள் அனைவரும் நதியில் மூழ்கடிப்பதற்குத் தகுதியானவர்கள் என்றால், எந்த அமலும் நாங்கள் தப்பிப்பதற்குக் காரணம் ஆக முடியாது என்றால், பிறகு, நீ உன் தூய, அன்பிற்குரிய மஸீஹ் அவர்கள் மக்களின் நேர்வழி மற்றும் ஈடேற்றத்திற்காக வெளியிடச் செய்த இந்த நூல்களுக்காக அந்தப் புயலை வீச விடாமல் தடுத்து விடுவாயாக! மேலும், எங்களை நலமுடன் கரை சேர்த்து விடுவாயாக!”

ஹஸ்ரத் மவ்லானா சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஓரிரு முறையே இந்த துஆ சொற்களை மீண்டும் மீண்டும் கூறினேன். புயல் ஒரேயடியாக ஓய்ந்து விட்டது. நாங்கள் நலமாக கரை சேர்ந்து விட்டோம். (ஹயாத்தே குத்ஸீ பக்கம் 34)

இந்த நிகழ்விலிருந்து தெளிவாவது என்னவெனில், தற்காலத்திலும் அல்லாஹ்வின் இருப்பு இருக்கிறது. மேலும், அது துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் மூலமாக அடையாளம் காணப்படுகிறது. நல்லியல்புள்ள எவரும் அதை மறுக்க முடியாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் அல் வஸிய்யத் நூலில் நுபுவ்வத்தை முதல் வல்லமை என்றும், கிலா.்.பத்தை இரண்டாம் வல்லமை என்றும் எழுதியுள்ளார்கள். அதாவது, மேலான அல்லாஹ் முதல் வல்லமை மூலமாகவும் தனது இருப்புக்கான சான்றைத் தருகிறான். இரண்டாம் வல்லமை மூலமாகவும் தருகிறான். ஆக, தற்காலத்தில் இரண்டாம் வல்லமையின் வெளிப்பாடான ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (நஸரஹுல்லாஹ்) அவர்களின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நிகழ்வுகளிலிருந்து அல்லாஹ் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் மூலமாக உலகத்திற்குத் தனது இருப்பிற்கான சான்றை எட்ட வைக்கிறான் என்பது தெரிய வருகிறது.

மதிப்பிற்குரிய அப்துல் மாஜித் தாஹிர் சாஹிப் அடிஷனல் வக்கீலுத் தப்ஷீர் இலண்டன் அவர்கள் கூறுகிறார்கள்: மே 2006 இல் அது ஒரு வியாழக்கிழமை ஆகும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் Far East நாடுகளுக்கான தமது சுற்றுப் பயணத்தின் போது, .்.பிஜியில் உள்ள ‘நான்தீ’ என்ற இடத்தில் இருந்தார்கள். இரவு கிட்டத்திட்ட ஒரு இரண்டரை மூன்று மணி இருக்கும். அப்பொழுது ரப்வா, இலண்டன் மற்றும் உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து .்.போன்கள் இவ்வாறு வரத் துவங்கின:

(ஹுஸூர்) இப்பொழுது டிவி-யில் வந்து கொண்டிருக்கும் செய்திகள்படி ஒரு மிகப் பெரிய சுனாமீ .்.பிஜிக்குப் பக்கத்தில் இருக்கும் தீவான Tonga-வில் வந்துள்ளது. மேலும், இந்த சூறாவளி ஆற்றல் அடிப்படையில், லட்சக்கணக்கான பேரை மூழ்கடித்து விட்டிருந்த, உலகத்தின் பல நாடுகளில் அழிவை ஏற்படுத்தியிருந்த இந்தோனேஷியா சுனாமியை விடப் பெரியது.

டிவியைப் போட்ட போது, “இந்த சுனாமி தனது தீவிரத்திலும், ஆற்றலிலும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. காலையில் .்.பிஜீயின் ‘நாந்தீ’ எனும் முழு பகுதியும் மூழ்கி விடும். மேலும், அக்கம் பக்கத்து தீவுகளும் மூழ்கி விடும். ஆஸ்திரேலியாவின் ஒரு பகுதியும் மூழ்கி விடும். மேலும், இது நியூஸிலாந்தின் ஒரு பெரும் பகுதியையும் மூழ்கடித்துவிடும்” என்ற செய்திகள் வந்து கொண்டிருந்தன.

காலை நாலரை மணிக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகை தொழுவதற்காக வருகை தந்த போது, அந்தப் புயல் பற்றிய அறிக்கை ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு வரடப்பட்டது. எந்தத் தூதுச் செய்திகள் நலம் விசாரிப்பதற்காக ஃபோனில் கிடைத்துக் கொண்டிருந்தனவோ அவை குறித்து கூறப்பட்டது. ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகை தொழ வைத்தார்கள். மேலும், மிக நீண்ட ஸஜ்தா செய்தார்கள். மேலும், இறைவன் முன்னிலையில் அழுது மன்றாடினார்கள். தொழுகை முடிந்ததும் மஸீஹின் கலீஃபா அவர்கள் ஜமாஅத் மக்களைப் பார்த்து, 'கவலைபடாதீர்கள்! அல்லாஹ் அருள் புரிவான். ஒன்றும் ஆகாது' என்று கூறினார்கள். அதற்குப் பிறகு, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹோட்டலுக்குத் திரும்பி வந்தார்கள். நாங்கள் திரும்பி வந்து டிவியைப் போட்ட போது டிவியில், 'இந்த சுனாமியின் வலு உடைகிறது. சிறிது சிறிதாக அதன் தீவிரம் முடிவுக்கு வருகிறது' என்ற செய்திகள் வரத் துவங்கி விட்டன. பிறகு, இரண்டரை மணிக்குப் பிறகு, 'இந்த சுனாமியின் சுவடே அழிந்து விட்டது' என்ற செய்திகள் வந்தன.



எனவே, அன்றைய நாள் உலகம் இந்த வினோதமான காட்சியைக் கண்டது. அதாவது, எந்த சுனாமி அடுத்த சில மணி நேரங்களில் இலட்சக்கணக்கான மக்களை மூழ்கடித்தவாறு அந்த முழு பகுதியையும் இல்லாமல் ஆக்க இருந்ததோ, அது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் துஆவால் சில மணி நேரங்களில் தானே இல்லாமல் போனது. அன்று ஃபிஜீயின் செய்தித்தாள்கள் சுனாமி அகன்றது எந்த அற்புதத்தை விடவும் குறைவானதில்லை என்ற செய்திகளை வெளியிட்டது. மதிப்பிற்குரிய அப்துல் மாஜித் தாஹிர் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! மேலும், இந்த அற்புதம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆ பரக்கத்தால் வெளிப்பட்டது என்ற விஷயத்திற்கு நான் சாட்சி ஆவேன். (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் நவம்பர் 21, 2024.பக்கம் 15-16)

காலத்தின் கலீஃபா அவர்களின் துஆக்களும் அவர்கள் வழங்கிய தபர்ருக்கும் பலர் குணமடைவதற்குக் காரணமாக அமைகிறது. அதன் மூலமாக அல்லாஹ் தனது இருப்புக்கும், துஆக்களை செவியேற்பவனாக இருப்பதற்கும் சான்று அளிக்கின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒருமுறை சீஸரின் தலையில் கடுமையான வலி ஏற்பட்டது. எல்லா வகையான சிகிச்சை செய்தும் அவனுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. ஒருவர் அவனிடம், "ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் தங்களது நிலையை எழுதி அனுப்பிடுங்கள். மேலும், அவர்களிடமிருந்து தபர்ருக்காக ஏதாவது பொருளை வரவழையுங்கள். அவர்கள் தங்களுக்காக துஆவும் செய்வார்கள். தபர்ருக்கும் அனுப்பி வைப்பார்கள். அவர்களது துஆவால் தங்களுக்குக் கண்டிப்பாக குணமாகிவிடும்" என்று கூறினார். அவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் தன் தூதுவனை அனுப்பினான்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இவர்கள் ஆணவம் கொண்ட மக்கள் ஆவார்கள். அவன் எங்கே என்னிடம் வரயிருந்தான். இப்பொழுது அவன் இன்னலில் ஆழ்ந்த பிறகு, அவன் தன் தூதுவனை என்னிடம் அனுப்பியுள்ளான். நான் அவனுக்கு வேறு ஏதாவது தபர்ருக் அனுப்பினால், அவன் அதை அற்பமாகக் கருதி பயன்படுத்தாமல் போகலாம். எனவே, நான் தபர்ருக்காகவும் இருக்கக்கூடிய, அவனது ஆணவத்தையும் தவிடுபொடி -யாக்கக்கூடிய ஏதாவது ஒரு பொருளை அனுப்ப வேண்டும்' என்று நினைத்தார்கள். எனவே, அன்னார் ஆங்காங்கே கறைபடிந்து, அழுக்கினால் கருப்பாகிவிட்டிருந்த தமது பழைய தொப்பி ஒன்றை அவனுக்கு தபர்ருக் ஆக அனுப்பி விட்டார்கள். அவன் இந்தத் தொப்பியைப் பார்த்த போது, மிகவும் வருந்தினான். எனவே, அவன் தொப்பியை அணியவில்லை. ஆனால் இறைவன், 'இப்பொழுது உனக்கு ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாகவே பரக்கத் கிடைக்கப் பெற முடியும்' என்று கூற இருந்தான்.

ஆக, அவனுக்கு எவ்வளவு பயங்கரமான தலை வலி ஏற்பட்டது என்றால், அவன் தன் பணியாளிடம், 'ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனுப்பி வைத்த அதே தொப்பியைக் கொண்டு வா! நான் என் தலையில் வைக்கிறேன்' என்று கூறினான். எனவே, அவன் தொப்பி அணிந்தான். அவன் தலைவலி நீங்க ஆரம்பித்தது. அவனுக்கு 8, 10 நாளுக்கு ஒருமுறை தலைவலி ஏற்பட்டு வந்தது. எனவே, அவனுக்கு இது வழக்கமாகி விட்டது. அதாவது, அவன் அரசவையில் அமரும் போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அதே அழுக்குப்படிந்த தொப்பியை தனது தலையில் வைத்திருப்பான். (சீரே ரூஹானீ பக்கம் 326)

துஆ மற்றும் தபர்ருக் மூலமாக குணமடையக்கூடிய நிகழ்வுகள் ஐந்தாவது கிலாஃபத்திலும் வெளிப்பட்டன. நேரத்தின் அருமையைக் கருத்தில் கொண்டு அவற்றில் ஒன்றை மட்டும் முன் வைக்கின்றேன். தீவுகளில் உள்ள நாட்டைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த பெண்மணி நாஸியா காஸ்மீ சாஹிபா அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களைச் சந்தித்த போது, தம் தாயார் புற்றுநோயிலிருந்து குணமடைவதற்கு துஆவிற்காக

விண்ணப்பித்தார்கள். அதற்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், 'அல்லாஹுத்தஆலா உடல் நலம் அளிப்பான். அருள் புரிவான்' என்று கூறினார்கள். அத்துடன் சேர்த்து ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தாயாருக்காக اَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ மோதிரத்தையும் அவர்கள் வழங்கினார்கள். அதை அவர்கள் தாயார் அணிந்து கொண்டார்கள்.

சில காலங்களுக்குப் பிறகு அவர்கள் தாயார் உடல் பரிசோதனைக்காகச் சென்றபோது மருத்துவர்கள், "இப்பொழுது அவர்களுக்கு எவ்வித பரிசோதனையோ, கீமோதெரப்பியோ செய்ய வேண்டிய தேவையில்லை. ஏனெனில், இப்பொழுது அவர்களது உடல்நலம் புற்றுநோய் ஏற்படுதவற்கு முன்னிருந்த உடல்நலத்தைக் காட்டிலும் மிகவும் நல்லதாகவும் சிறந்ததாகவும் உள்ளது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த அடையாளம் அவர்களின் முழு குடும்பத்தினரின் உள்ளங்களை மாற்றி விட்டது. மேலும், இந்த அடையாளத்தைப் பார்த்து 36 பேரை உள்ளடக்கிய குடும்பம் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டது. (அல் ∴பஸ்ல் இன்டர்நேஷனல் நவம்பர் 21, 2014 பக்கம் 14)

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உண்மை என்னவென்றால், நம் இறைவனோ துஆக்களால் அடையாளம் காணப்படுகிறான். பேசக்கூடிய இறைவன் ஒருவனே. அவன் இஸ்லாத்தின் இறைவன் ஆவான். அவனைத் திருக்குர்ஆன் முன்வைத்துள்ளது. அவன் اُدْعُوْنِیْٓ اَسْتَجِبْ لَكُمْ நீ என்னை அழைத்திடு. நான் உனக்கு பதில் அளிப்பேன் என்று கூறுகிறான். ஒருவர் நீண்ட காலம் வரை உண்மையான நிய்யத் மற்றும் தூய்மையுடன் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டு, கடுமையாகப் போராடி, துஆக்களில் மூழ்கியிருந்தால், கடைசியில் அவன் செய்த துஆக்களுக்கு அவனுக்குக் கண்டிப்பாக பதில் அளிக்கப்படும் என்பது முற்றிலும் உண்மையான விஷயம் ஆகும். (மல்∴பூஸாத் தொகுதி 03, பக்கம் 201. 1984 வெளியீடு)

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தைப் பார்த்துக் கூறுகிறார்கள்: இறைவன் இந்த ஜமாஅத்தை அதன் முன்மாதிரியால் மக்களுக்கு இறைவன் நினைவுக்கு வருகின்ற ஜமாஅத்தாக ஆக்கவிரும்புகிறான். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 504. 1989 வெளியீடு)

எந்த சமுதாயத்தின் முன்மாதிரியால் மக்களுக்கு இறைவன் நினைவுக்கு வருவானோ அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவரையும் ஆக்கிடுவானாக! ஆமீன். அல்லாஹும்ம ஆமீன்!

## 'வெளிப்படையான மறைமுகமான அறிவுகளால் நிரப்பப்படுவார்.'

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

"ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சாதனைகளுள் ஒன்றை மட்டும் கூறுகின்றேன். வெளிப்படையான மறைமுக-மான அறிவுகளால் நிரப்பப்படுவார் என்பதும் ஒரு முன்னறிவிப்பாகும். அதன் ஒரு பொலிவை உங்கள் முன் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் உடைய நூல்கள், சொற்பொழிவுகளின் தொகுப்பு 'அன்வாருல் உலூம்' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை 'அன்வாருல் உலூம்' 26 தொகுதிகள் வெளிவந்து விட்டன. இவற்றில் இடம்பெற்றுள்ள அன்னாரது நூற்கள், சொற்பொழிவுகள், உரைகள் மொத்தம் 670 ஆகும். குத்பாத்தே மஹ்மூது இதுவரை 39 தொகுதிகள் வெளிவந்து விட்டன. இதில் 1959-ஆம் ஆண்டு வரையுள்ள குத்பாக்கள் வெளிவந்து விட்டன. இவற்றில் மொத்தம் 2367 குத்பாக்கள் இடம்பெற்றுள்ளன. 'த∴ப்ஸீரே ஸகீர்' 1071 பக்கங்களை கொண்ட-தாகும். 'த∴ப்ஸீரே கபீர்' 10 தொகுதிகளைக் கொண்டது. இதில் திருக்குர்ஆனின் 59 சூராக்களுக்கு விளக்கவுரை எழுதப்-பட்டுள்ளது. 'த∴ப்ஸீரே கபீர்' 10 தொகுதிகளைச் சேர்த்து 5907 பக்கங்கள் உள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் எழுத்துக்கள் மற்றும் கூற்றுக்கள் ஆகியவற்றிலிருந்து குர்ஆன் விளக்கங்களை ஒன்றுசேர்க்குமாறு Research Cell துறையிடம் பணித்திருந்-தேன். அது 9000 பக்கங்கள் ஆகி விட்டது. இன்னும் பணி தொடர்ந்து நடக்கிறது. இது அன்னாருடைய பணிகள் குறித்த சுருக்கமான ஆய்வாகும்."



(ஜுமுஆ குத்பா 21.02.2020)




# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐரோப்பிய சுற்றுப் பயணம்

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

3

அடுத்து நிகழவிருந்ததைப் பற்றி 'உவமையாகக் கொட்டித் தீர்த்த பெருமழை' என்றே கூற முடியும். அது ஒரு தேசத்தின் எல்லைக்குள் மட்டுப்படுத்தப்படாமல் உலகம் முழுவதும் பரவிய செய்தி மழையாகும். விரைவில் வெகுஜனம் மத்தியில் செய்தி பரவியதும் பேரரசின் தலைநகர் கலீஃபத்துல் மஸீஹ் என்ற பெயரை எதிரொலித்தது.

### எதிர்பார்ப்பு:

ஆகஸ்ட் 1924 இல் நீங்கள் செய்தித்தாளைத் திறந்திருந்தால், நீங்கள் ஒரு சுவாரஸ்யமான விளம்பரத்தைக் கண்டிருப்பீர்கள்:

"நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கிழக்கத்திய உலகின் மிகப்பெரும் போதகர் இப்போது இலண்டனில் உள்ளார். நீங்கள் எஜமானரைச் சந்திக்க விரும்புகின்றீர்களா? தொடர்பு கொள்ளுங்கள்: தனிச்செயலர், கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ், சேசம்பிலேஸ் பல்கிரேவியா, இலண்டன். (தி நுனீட்டன் கிரானிக்கல் 15 ஆகஸ்ட் பக்கம்1)

எனவே இலண்டனின் ஒரு சாதாரண பிரஜை 'யார் இந்தக் கலீஃபத்துல் மஸீஹ்?' என்று கேட்கிறார். 1924 ஆகஸ்டில் இருப்பதாக நம்மை நாமே கற்பனை செய்து கொண்டு ஒரு வரலாற்றுக் கண்ணோட்டத்துடன், அந்தக் கேள்விக்கு விடை காண்போம்.




அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மற்றும் அதன் தலைவர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது வருகை பற்றியும் விரிவான விவரங்களைக் குறித்து இலண்டனின் செய்தித்தாள்கள் நாடு தழுவிய கவரேஜை வழங்கின. தி டெய்லி டெலிகிராப் மற்றும் தி பர்மிங்காம் கெசட் போன்ற சில செய்தித்தாள்கள் முகலாயப் பேரரசர்களுக்கு ஹுஸூர் (ரலி) அவர்களது உறவுகள் பற்றிய கூடுதல் தகவல்களை வழங்கின.. அவற்றின் தலைப்புச் செய்திகள் இந்த செய்தித்தாள்கள் ஹுஸூர் (ரலி) மற்றும் ஜமாஅத்தின் மீது மிகுந்த ஆர்வத்தைக் காட்டியதைப் பிரதிபலிக்கின்றன. இலண்டனில் ஹுஸூர் (ரலி) அவர்கள் எப்படி வரவேற்கப்பட்டார்கள் என்பதை நாம் இப்போது அந்தச் செய்தித்தாள்களிலிருந்தே சிறிது தெரிந்து கொள்வோம்.

### கலீஃபத்துல் மஸீஹ் யார்?

### தி டெய்லி நியூஸ் செய்தித்தாள் எழுதியது:

"செஷாம் எனும் இடத்தில் தங்கியிருக்கும் கலீஃபத்துல் மஸீஹை நேற்று இரவு டெய்லி நியூஸ் பிரதிநிதி ஒருவர் சந்தித்தார். (கலீஃபாவாகிய) அவர் 35 வயதான ஒரு அழகான மனிதர் ஆவார். தந்தத்தின் நிறம் மற்றும் நீண்ட, கருப்பு தாடியுடன் காணப்பட்ட அவர் பிரிட்டிஷ்-இந்திய தேசத்தைச் சேர்ந்தவர், மேலும் வெள்ளைத் தலைப்பாகை மற்றும் பஞ்சாபியின் சாதாரண உடை அணிந்திருந்தார். (டெய்லி நியூஸ் 23, ஆகஸ்டு 1924)

இஸ்லாத்தில் அஹ்மதிய்யா இயக்கத்தின் தூய தலைவரான கலீஃபத்துல் மஸீஹ் பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அடுத்த வாரத் துவக்கத்தில் இலண்டனுக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரைப் பின்பற்றுபவர்கள் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் ஆவர். அவருடைய ஜமாஅத் பெர்லினில் ஒரு பள்ளிவாசலைக் கட்டுகிறது. இதற்கு அமெரிக்காவிலும் அதிக ஆதரவாளர்கள் உள்ளனர். அவருடன் பன்னிரெண்டு கிழக்கத்திய அறிஞர்கள் வருவார்கள்.

செப்டம்பர் 22 முதல் அக்டோபர் 6 வரை, வெம்ப்லியில் நடைபெறும் பிரிட்டிஷ் பேரரசு கண்காட்சியில் நடைபெறும் 'பேரரசில் வாழும் மதங்கள்' மாநாட்டில் இஸ்லாம் பற்றிய தனது கருத்துகளைப் பிரதிநிதித்துவப் -படுத்த அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் அழைக்கப்பட்டுள்ளார். பெல்கிரேவியா என்ற இடம் அவருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

"அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பின்பற்றுபவர்கள் பிரிட்டனுக்கு தீவிர விசுவாசமாக இருப்பதாகக் கூறுகின்றனர். மேலும் அவர்கள் துருக்கிய கிலாபத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இலண்டனில் உள்ள ஜமாஅத்தின் தலைமையகம் 63, மெல்ரோஸ் சாலை, சவுத் ஃபீல்ட்ஸில் அமைந்துள்ளது." (தி கார்டியன், 13 ஆகஸ்டு 1924)

'ஃப்ரீமேன்ஸ் ஜெர்னல்' பத்திரிகை ஜமாஅத்தின் பின்னணி குறித்த கூடுதல் தகவல்களைக் கொடுத்தது,

“அதன் தோற்றுநர் மிர்ஸா குலாம் அஹ்மத் 1908 இல் மரணித்தார்கள், மேலும் தாமே மெஸாயா மற்றும் மஹ்தி என்று வாதித்தார்கள்.” மேலும் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் குறித்து அது மேலும் கூறியது: “அவர்கள் ஆர்வமிக்க பிரச்சாரகர்கள். அவர்கள் இஸ்லாமிய சீர்திருத்தத்திற்காகப் பாடுபடுகிறார்கள். மேலும், எந்த நாட்டின் கீழ் மார்க்க சுதந்திரத்தை அவர்கள் அனுபவிக்கின்றார்களோ அந்த அரசாங்கத்திற்கு அவர்கள் பற்றுள்ளவர்களாகத் திகழ்கின்றார்கள். அவர்களது ஜமாஅத்தின் கிளை இலண்டனில் உள்ளது. மேலும் சவுத் ஃபீல்ட்ஸ், எஸ்.டபிள்யூ, மெல்ரோஸ் சாலையில் உள்ள அவர்களது பள்ளிவாசலில் தொழுகைகள் தொடர்ந்து நடத்தப்படு-கின்றன.” (ஃப்ரீமேன்ஸ் ஜர்னல், 20 ஆகஸ்டு 1924, பக்கம் 8)

ஹுஸூர் (ரலி) அவர்களின் வருகையின் அம்சங்களைப் பற்றி அதிகம் பேசப்பட்ட ஒன்று இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டில் நடைபெற்ற ‘பேரரசிற்குள் சில வாழும் மதங்கள்’ குறித்த மாநாடு ஆகும். மதிப்புமிக்க சொற்பொழிவாளர்களில் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் இருந்தார்கள், மேலும் அன்னாரது பங்கேற்பு மிகவும் எதிர்பார்க்கப்பட்டது. மாநாடு பெரும்பா-லும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் தொடர்புடையதாக இருந்தது. ஆனால் இதைப் பற்றி பின்னர் ஆழமாக ஆராய்வோம். இப்போது, நார்த்தர்ன் விக் அண்ட் பெல்ஃபாஸ்ட் போஸ்ட், வெஸ்டர்ன் டெய்லி பிரஸ், ஈவினிங் ஸ்டாண்டர்டு மற்றும் அபெர்டீன் பிரஸ் அண்ட் ஜர்னல் ஆகியன ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது வருகையைக் குறித்த எதிர்பார்ப்பையும் மாநாட்டில் பங்கேற்பதையும் எவ்வாறு உற்சாகமாக அறிவிக்கின்றன என்பதைப் பார்ப்போம்:




“வெம்ப்லி மாநாட்டிற்கு முன்னர் மார்க்க சிந்தனை-யாளர்களின் ஆரம்பக் கூட்டத்தைக் கூட்டுவது கண்ணியத்திற்குரிய கலீஃபாவின் நோக்கமாகும். இதன் மூலம், இஸ்லாத்தின் எந்த அம்சத்தை மேற்கு நாடுகளுக்கு வழங்க வேண்டும் என்பதை அவர் முடிவு செய்கிறார். கலீஃபா இங்கிலாந்தில் சுமார் ஒன்பது வாரங்கள் தங்கிஇருப்பார்.” (அபெர்டீன் பிரஸ் அண்ட் ஜர்னல், 25 ஆகஸ்ட் 1924)

### இலண்டனில் இஸ்லாம்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்ட கவனம் இலண்டன் வாழ் மக்களின் மனதில் ஆர்வத்தைத் தூண்டியது. கலீஃபா, மஹ்தி மற்றும் மெஸாயா என்ற சொற்களின் பின்னணியில் உள்ள அர்த்தங்களைப் பற்றி மேலும் அறிய அவர்கள் ஆர்வமாக இருந்தனர். எது மற்றவர்கள் இவர் மீது நம்பிக்கை கொள்ள வைக்கிறது என்பதை அறிய மக்கள் பெரும் ஆர்வம் கொண்டனர், தொலைதூரப் பகுதியிலிருந்து வந்துள்ள இந்த கிழக்கத்தைய அறிஞர் யார்? நார்த் மெயில் அண்ட் நியூகேஸில் குரோனிக்கிள் மற்றும் பெல்ஃபாஸ்ட் டெலிகிராப் ஆகியவை கீழே வழங்கப்பட்டுள்ளபடி நமக்கு பதில்களைத் தருகின்றன:

‘கலீஃபத்துல் மஸீஹ்’ என்ற அவரது அரபிப் பெயருக்குப் பொருள் ‘மெஸாயாவின் பிரதிநிதி’ என்பதாகும். வெம்ப்லியில் உள்ள பேரரசின் மார்க்கங்களின் மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கத்திற்காக தற்போது அவர் இலண்டனில் இருக்கிறார், அவரது தனிப்பட்ட பெயர் பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஆகும். அவர் மிர்ஸா குலாம் அஹ்மத் கானின் மகன் மற்றும் அவரது இரண்டாவது பிரதிநிதியானவர், அவர் அவரது பெயரின் இறுதிப் பகுதியிலிருந்து பெறப்படும் அஹ்மதிய்யா இயக்கம் என்ற இஸ்லாமிய பிரிவின் நிறுவனர் ஆவார்.

“இந்த இயக்கம் முஸ்லிம்-களால் வழிதவறிய கொள்கையாகக் கருதப்படுகிறது, ஆனால் அது இந்தியாவில் அரை மில்லியன் பின்தொடர்பவர்களைக் கொண்டுள்-ளது. அங்குதான் அதன் நிறுவநர் 1839 இல் பிறந்தார்.” [sic. 1835].

“இயக்கத்தின் தோற்றுநர் தம்மை ஒரு மஹ்தியாக வாதிட்டார். இது ஒரு அரபு வார்த்தையாகும், இது ‘வழிகாட்டப்பட்டவர்’ என்று பொருள்-படும், மேலும் இறைஅறிவிப்பு பெறும் நபர்களுக்கு இது பயன்படுத்தப்படு-கிறது. அவர் தம்மை முஹம்மது மற்றும் கிறிஸ்துவின் பிரதிநிதியாக அறிவித்தார், இறைத் தூதர்களின் கடைசி நபராக பூமிக்கு வந்திருக்கி-றார், மேலும் அவரது பெயருடன் தொடர்புடைய கோட்பாடுகள் இறுதி-யாக 1891 இல் அறிவிக்கப்பட்டன. - ‘எ இலண்டனரின் டைரி’ (ஈவெனிங் ஸ்டன்டர்ட்.)” (நார்த் மெயில் அண்ட் நியூகேஸில் குரோனிக்கிள், 27 ஆகஸ்ட் 1924, பக்கம் 9)

பெல்ஃபாஸ்ட் டெலிகிராப் “வாக்களிக்கப்பட்ட மெஸாயா: முஸ்லிம் மார்க்கத்தின் தலைவர் இலண்டனில் - மகனின் வருகை” என்ற தலைப்பில் எழுதியது:

வாழும் மதங்கள் பற்றிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பன்னிரண்டு தோழர்களுடன் இலண்டன் வந்துள்ள முஸ்லிம்களின் அஹ்மதிய்யா பிரிவின் தலைவர் கலீஃபத்துல் மஸீஹ் (மெசாயாவின் கலீஃபா) நேற்று மதியம் செஷாம் பிளேஸில் உள்ள ஒரு வீட்டில் இருந்தார். அவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மதின் மகன் ஆவார். அவர் வாக்களிக்கப்பட்ட மெஸாயாவாக அவரைப் பின்பற்றுபவர்-களால் கருதப்படுகிறார். அவர் வெள்ளைத் தலைப்பாகை அணிந்து, பொன்மூலாம் பூசப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரைப் பின்பற்றுபவர்களில் அவரது சகோதரரைத் தவிர அனைவரும் - அறிவுசார் ஆன்மிகத்தின்

நிறமான - பச்சைத் தலைப்பாகைகளை அணிந்திருந்தனர்., அவர் சாம்பல் நிறத்தில் அணிந்திருந்தார்.

“இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டில் நடைபெறும் மாநாட்டில் இஸ்லாம் பற்றிய கட்டுரையை வாசிப்பார். அவரது குடும்பம் முகலாய மற்றும் பாரசீக அரச வம்சாவளியில், சில தலைமுறைகளுக்கு முன்பு இந்தியாவில் குடியேறியது.

உலகத்திற்கு மார்க்க சம்பந்தமான வழிகாட்டலை வழங்க தாம் நியமிக்கப்பட்டிருப்பதாக தமக்கு அருளப்பட்ட இறைவெளிப்பாடுகள் தெரிவிப்பதாக அவரது தந்தை கூறுகிறார். மெசாயாவாக அவர் வாதம் செய்வதற்கு முன்பு, அவர் சியால்கோட்டில் பணிபுரிந்தபோது, ஓர் இரவு அவர் விழித்தெழுந்தார், மெல்லிய கிரீச் ஒலியைக் கேட்டார், அதிலிருந்து கூரை விழப்போகிறது என்று அவர் முடிவு செய்தார். அவர் தனது தோழர்களை எழுப்பினார். அதாவது, வீட்டில் இருந்த மற்றவர்கள் - ஆனால், இது அவரின் கற்பனை என்று நினைத்து, அவர்கள் மீண்டும் தூங்கச் சென்றனர். அவர் அவர்களை மீண்டும் ஒருமுறை எழுப்பினார், ஆனால் அவர்கள் அவரைக் கேட்க மறுத்து விட்டனர். மூன்றாவது முறையாக அவர் அதே ஒலியைக் கேட்டார், மேலும் விழுவதற்குத் தயாரான கூரை அவர் அறையை விட்டு வெளியேறுவதற்காக மட்டுமே காத்திருக்கிறது என்பதை அவர் உணர்ந்தார். பின்னர் அவர் அறையை விட்டு வெளியேறும்படி மற்றவர்களைக் கட்டாயப்படுத்தினார். பிறகு அவர் வெளியேறியவுடன், கூரை உள்ளே விழுந்தது.

“கலீ∴பாவின் நிகழ்ச்சிகளில் இன்று பிரிட்டனுக்கு வருகை தருவதும் அடங்கும், அங்கு பேட்சாமுக்கு அருகில் உலகப் போரில் இறந்த இந்திய வீரர்களின் நினைவுச் சின்னமும், ராயல் பெவிலியனில் நினைவு நுழைவாயிலும் உள்ளது. அதன் பிறகு, அவர் கிளாஸ்டன்பரிக்கு செல்கிறார்.” (பெல்∴பாஸ்ட் டெலிகிராப், 29 ஆகஸ்ட் 1924, பக்கம் 5)



இப்போதைக்கு செய்தித்தாள்களிலிருந்து ஹஸ்ரத் ஷேக் ய∴கூப் அலி இர்∴பானி (ரலி) மற்றும் ஹஸ்ரத் பாய் அப்துர் ரஹ்மான் காதியானி (ரலி) ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் பயணத்தின் நாட்குறிப்புகள் பக்கம் செல்வோம். ஹுஸூர் (ரலி) அவர்களின் வருகைக்காக இலண்டன் எதிர்பார்ப்புடன் காத்திருந்த, அந்த நேரத்தில் பயணக்குழு எங்கிருந்தது? ஹுஸூர் (ரலி) அவர்களின் நிகழ்ச்சிகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதைப் பார்ப்போம்.

இத்தாலியின் பிரிண்டிசி துறைமுகத்தை அடைந்ததும், ஆகஸ்ட் 16, 1924 தேதியிட்ட ஒரு தந்தி, இலண்டனுக்கு அனுப்பப்பட்டது, ஆகஸ்ட் 22 அன்று இலண்டனுக்கு வருகை தரவிருப்பதைக் குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச∴பர்-இ-ஐரோப்பா, பக்கம் 123)

வருகைக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அனுப்பப்பட்ட தந்தியின் செய்தி இலண்டனில் மீண்டும் மீண்டும் பிரசுரிக்கப்பட்ட டெய்லி மிரர் “தலைப்பாகைகளில் பார்வையாளர்கள்: இந்திய மார்க்கத் தலைவருடன் வெம்ப்லியைப் பார்வையிட அழகிய கிழக்கத்தியர்கள்” என்று அறிவித்தது. அவர்கள் ஹுஸூர் (ரலி), அவர்களது பயணக் குழுவினர் மற்றும் ஜமாஅத் பற்றிய விளக்கக் குறிப்பை உருவாக்கினர். ஹுஸூர் (ரலி) அவர்களின் வருகைக்கு ஒரு நாள் முன்னதாக, டெய்லி மிரர் மற்றும் வெஸ்ட்மின்ஸ்டர் கெஸட் சரியான நேரத்தையும் இடத்தையும் தெரிவித்தன: “விக்டோரியா நிலையத்தில் நாளை மாலை 3:20 மணிக்கு பிரார்த்தனை நிகழ்த்தப்படும்.” (தி டெய்லி மிரர், 21 ஆகஸ்ட் 1924, பக்கம் 3)

எனவே, எதிர்பார்க்கப்பட்ட நேரம் வருகிறது. ஹஸ்ரத் மிர்சா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) கலீ∴பத்துல் மஸீஹ், இலண்டன் விக்டோரியா நிலையத்திற்கு வருகிறார்கள்.

#### ரிவியூ ஆ∴ப் ரிலிஜியன்ஸ் எழுதியது:

“பெறப்பட்ட மற்றொரு கேபிளில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்னவெனில் ஆகஸ்ட் 22 ஆம் தேதி ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் பயணக் குழுவினரும் இலண்டனை அடைந்தனர். சர் பிரான்சிஸ் யூங்கஸ்பாண்ட், இலண்டன் மார்க்க மாநாட்டின் பிற செயற்குழு உறுப்பினர்கள், அத்துடன் பல ஆங்கில செய்தித்தாள்களின் பிரதிநிதிகள், மற்றும் ஒரு பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் - அவர்களில் ஆங்கிலேயர்கள் மற்றும் இந்தியர்கள் இருந்தனர் - அனைவரும் அன்னாரை வரவேற்க இரயில் நிலையத்திற்கு வந்திருந்தனர்.” (ரிவியூ ஆ∴ப் ரிலிஜியன்ஸ், தொகுதி 23, செப்டம்பர் 1924, பக்கம் 332)

#### வருகை:

தற்போது பிற்பகல் 3:20 மணி இரயில் இன்னும் வரவில்லை. பத்திரிகை நிருபர்கள் நிறைந்த ஒரு நடைமேடை, ஆனால் எதுவும் நடக்கவில்லை. காரணம் இரயிலின் தாமதம், ஆனால் காத்திருந்தவர்களுக்கு அது தெரியாது. சிறிது நேரம் கழித்து, கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் வெளியேற ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி அப்துர் ரஹீம் நய்யர் (ரலி), வெளியேறவிருந்த டஜன் கணக்கான மக்களுடன் அந்த மேடையில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் விவரிக்கிறார்கள்:

“ஆகஸ்ட் 22, 1924 அன்று, எதிர்பார்க்கப்பட்ட மாலை 3:20 மணிக்கு பதிலாக ஹுஸூர் (ரலி) மாலை 6:00 மணிக்கு விக்டோரியா நிலையத்தை அடைந்தார்கள், இது அந்தப் பெரும் கூட்டத்திற்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியது, அதில்

பார்வையாளர்கள் மற்றும் பிரபல மற்றும் சாதாரண பத்திரிகைகளின் நிருபர்கள், சினிமா கம்பெனி நிபுணர்கள் போன்றவர்கள் இருந்தனர். எப்படி இருப்பினும், அந்தக் கூட்டத்தின் பெரும் பகுதிக்கு தேநீர் ஏற்பாடு செய்தேன். இவ்வாறு, மாலை இரயில் வரும் வரை காத்திருப்பு தொடர்ந்தது. அல்ஹம்துலில்லாஹ்! இந்த வழிமுறை பலனளித்தது. எங்கள் இமாமுக்கு ஓர் அன்பான வரவேற்பை முன்வைப்பதில் நாங்கள் வெற்றி பெற்றோம். இலண்டன் வந்தடைந்தவுடன் ஹுஸூர் அவர்களிடம் நான் முன்வைத்த என் தாழ்மையான வேண்டுகோள் இதுவாகும்.

“ஹுஸூர் அவர்களே! அறியாமையிலிருக்கும் இந்த நாட்டிற்காக துஆ செய்யுங்கள்!”

இதற்குப் பிறகு, ஹுஸூர் (ரலி) அவர்கள் கைகளை உயர்த்தி, அமைதியாக கூட்டு துஆ செய்தார்கள். இவ்வாறாக, இலண்டனில் ஹுஸூர் அவர்களின் நிகழ்ச்சி தொடங்கியது, அவற்றில் முக்கிய நிகழ்வுகள் பின்வருமாறு:

”ஆகஸ்ட் 22: லுட்கேட் ஹில் மற்றும் லுட்கேட்டில், செயின்ட் பால்ஸ் கதீட்ரல் முன் பிரார்த்தனை, 6 சேஷாம் பிளேஸில் தங்குதல்.” (அல் பஸ்ல், 28 டிசம்பர் 1939, பக்கம் 66)

ஹஸ்ரத் ய.ஃகூப் அலி இர்.ஃபானி (ரலி) விவரிக்கிறார்கள்: “நாங்கள் பாரிஸிலிருந்து காலை 10:00 மணிக்குப் புறப்பட்டோம், மாலை 3:00 மணியளவில், கலாயிஸிலிருந்து கப்பலில் ஏறி ஆங்கில கால்வாயைக் கடந்தோம். இருப்பினும், பொதுவாக இது ஒரு மணி நேர பயணமாகும், பலத்த காற்று காரணமாக, கொந்தளிப்பு இருந்தது, பயணிகள் பலர் வாந்தியெடுத்தனர். மாலை 4:00 மணிக்கு அங்கு சென்ற பிறகு, நாங்கள் மற்றொரு இரயிலில் ஏறி மாலை 6:00 மணிக்கு இலண்டன் விக்டோரியா நிலையத்தை அடைந்தோம். மாலை 3:20 மணிக்கு நாங்கள் அங்கு செல்வோம் என்று கூறி ஒரு தந்தி முன்பு இலண்டனுக்கு அனுப்பப்பட்டது. அந்த நேரத்தில், ஹுஸூர் அவர்களை வரவேற்க சுமார் 250-300 பேர் அங்கு வந்தனர், இதில் முக்கிய இலண்டன் செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் மற்றும் பிற பிரமுகர்கள் இருந்தனர். அவர்கள் மாலை 5:00 மணி வரை காத்திருந்து பின்னர் வெளியேறினர். இருப்பினும், மக்களில் ஒரு குழுவினர் இன்னும் அங்கே இருந்தனர். நிலையத்தை அடைந்ததும், ஹுஸூர் அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களை அமைதியான துஆவில் வழிநடத்தினார்கள். ஹுஸூர் அவர்கள் துஆ செய்த காட்சி புகைப்படக் கலைஞர்களால் படமெடுக்கப்பட்டு பல்வேறு இலண்டன் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது..

### லுட்கேட்டில் துஆ:

“அங்கிருந்து, அவர்கள் ஹுஸூர் (ரலி) லுட்கேட்டிற்கு தனது தோழர்களுடன் சென்றார்கள். புகழ்பெற்ற செயிண்ட் பால் கதீட்ரலின் நுழைவாயிலுக்கு அருகிலுள்ள முற்றத்தில் ஹுஸூர் அவர்கள் இஸ்லாம் மற்றும் கஸ்ர்-இ-சலீபின் (சிலுவை மீதான) வெற்றிக்காக துஆ செய்தார்கள். இது போன்ற ஒரு காட்சியை இலண்டன் மக்கள் இதற்கு முன்பு பார்த்ததில்லை, இதனால், மக்கள் அதிக எண்ணிக்கையில் அங்கு கூடினர். ஒரு நீண்ட துஆவை வழிநடத்திய பின்னர், ஹுஸூர் (ரலி) தமது பரிவாரங்களுடன் 6 சேஷாம் பிளேஸுக்குச் சென்று, குடியிருப்புக்குள் நுழைவதற்கு முன்பு மீண்டும் ஓர் அமைதியான பிரார்த்தனையை வழிநடத்தினார்கள். பல்வேறு செய்தித்தாள்களின் நிருபர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் வருகை தருகிறார்கள், துஆ செய்யும் போது அவர்களது புகைப்படங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்படுகின்றன.” (அல் ஃபஸ்ல், 23 செப்டம்பர் 1924, பக்கம் 5)

(தொடரும்...)






**ஹ**ஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''அறிவும் சிந்தனையும் தவறாக பயன்படுத்தப்பட்டு ஷய்த்தானாக ஆகி விடுகின்றன. அறிவு இருக்கிறது. இது சிறந்த ஒன்றாகும். மனிதன் அறிவாளியாக இருந்தால் பெரும் பெரும் பணிகளைச் செய்கின்றான். இந்த அறிவும் மனித சிந்தனையும் இதில் மனிதன் பெருமை கொள்ள ஆரம்பித்து விட்டால், தவறான பணிகளுக்காக இதனை பயன்படுத்த ஆரம்பித்து விட்டால் அல்லது நன்மைகளுக்கு எதிராக இதை நிறுத்தினால் இவைகள் ஷய்த்தானாக ஆகி விடுகின்றன.''

இறையச்சம் உடையவர்கள் யார்? இதுபோன்ற சமயத்தில் அவர்களின் பணி என்ன? அறிவு மற்றும் சிந்தனை போன்று இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ள ஆற்றல்களைச் சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதுதான் இறையச்சமுடையவர்களின் அசல் பணியாகும். இவைகள் சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படவில்லை என்றால் இவைகளே மனிதனுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றன. அல்லாஹ்விடமிருந்து தூரம் விலக்குகின்றன. ஷய்த்தானுக்கு நெருக்கமாக்கி விடுகின்றன.

பிறகு இன்னோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: ''தக்வாவின் விஷயங்கள் நுணுக்கமானவையாகும். அதனைப் பெறுவதற்காக உள்ளத்தில் இடம் கொடுங்கள். எவருடைய செயல்களில் சிறிதும் பகட்டு இருக்குமோ இறைவன் அவனுடைய செயல்களை திருப்பி அவனது முகத்தில் எறிகின்றான்.''

எந்த செயலிலும் காட்டுதல், பகட்டு, செயற்கைத்தனம் இல்லாமல் இருக்க வேண்டும். இது இருக்கும் என்றால் பிறகு அந்த செயல் இறைவனுக்கானது அல்ல. அது இறை வணக்கங்களானாலும் சரி, திருக்குர்ஆன் ஓதுவதாக இருந்தாலும் சரி, நோன்பு வைப்பதாக இருந்தாலும் சரி அல்லது வேறு ஏதேனும் நன்மையான காரியமாக இருந்தாலும் சரியே. நீங்கள் இறைவனுக்காக மட்டுமே அஞ்ச வேண்டும்? நன்மை இருக்கும் என்றால், இறையச்சம் இருக்கும் என்றால் பிறகு இந்த கோபத்திலிருந்து விலகியிருப்பது இறைவனுக்காக இருக்க வேண்டும். சின்ன விஷயத்திற்கு உங்களுடைய 'நான்' என்ற அகந்தையைக் கொண்டு வராதீர்கள். மாறாக, தங்களது செயலை இறைவனுடைய விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''அற்புதங்களும், இறை அறிவிப்புகளும் கூட தக்வாவின் நிபந்தனைகளாகும். அசல் இறையச்சமே ஆகும்.'' எனக்கு இல்ஹாம்கள் வருகின்றன அல்லது நான் அற்புதங்களைக் காட்டுகிறேன் என்று ஒருவர் கூறினால், இது தக்வாவில் கிடைக்கக் கூடிய இரண்டாம் பட்ச நன்மைகளாகும். அசல் தக்வாவே ஆகும். ''எனவே, நீங்கள் இல்ஹாம்களுக்கும், கனவுகளுக்கும் பின்னால் செல்லாதீர்கள். மாறாக, தக்வாவைப் பெறுவதன் பக்கம் செல்லுங்கள். எவர் இறையச்சமுடையவராக இருக்கிறாரோ அவருடைய இல்ஹாம்களே சரியானவையாகும். தக்வா இல்லை என்றால் இல்ஹாம்களும் நம்பத்தக்கவைகள் அல்ல. அதில் ஷய்த்தானின் பங்கு இருக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன.''

''ஒருவருக்கு இல்ஹாம் வருவதை வைத்து அவரது இறையச்சத்தை அடையாளம் காணாதீர்கள்.'' இவருக்கு அதிகமான கனவுகள் வருகிறது. எனவே, இவர் இறையச்சம் உடையவராவார்; மிகவும் நல்லவராவார்; இல்ஹாம்கள் இவருக்கு வருகிறது; ஆன்மிகக் காட்சிகள் வருகின்றன எனக் கருதாதீர்கள். அவ்வாறு இல்லை. மாறாக, அவருடைய இல்ஹாம்களை அவருடைய தக்வாவின் நிலையைக் கொண்டு பரிசோதியுங்கள். இல்ஹாம்களும் கனவுகளும் சரியா எனத் தெரிய வேண்டும் என்றால் இறையச்சமும் இருக்கிறதா என்பதைப் பாருங்கள். சில சின்னச் சின்ன விஷயங்கள் உள்ளன. உதாரணமாக, எவரோ ஒருவர் நீ என்னுடைய இன்ன பொருளை எடுத்துக் கொண்டாய் என்று கூறினால் கோபம் வந்து விடுகிறது. கோபம் வருவது, தனது உரிமைக்காக பிறருக்கு இழப்பை ஏற்படுத்துவது ஆகிய இவற்றிலிருந்து விலகி இருக்கவில்லை என்றால் அவர் நான் உண்மையான கனவுகள் காண்கிறேன் என இலட்சம் முறை கூறினாலும் அவை அனைத்தும் வீணானதாகும்.

பிறகு ஒவ்வொரு நன்மையின் ஆணிவேர் இறையச்சமாகும் என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

''இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். தக்வா எல்லாவற்றின் வேர் ஆகும். ஒவ்வொரு நுணுக்கத்திலும் நுணுக்கமான பாவத்திலிருந்தும் பாதுகாப்பாக இருப்பது என்பதே தக்வாவின் பொருளாகும். எதில் தீமைக்கான சந்தேகம் இருக்குமோ அதிலிருந்து விலகியிருப்பதே தக்வாவாகும். வெளிப்படையாகத் தெரிகின்ற தீமையிலிருந்து மட்டும் தவிர்ந்திருப்பது அல்ல. மாறாக, எதில் தீமை இருக்கும் என்ற சந்தேகம் இருக்குமோ அதிலிருந்து விலகி இருப்பதாகும். உள்ளத்தின் உதாரணம் சிறு சிறு வாய்க்கால்கள் பிரிகின்ற ஒரு பெரிய ஆற்றைப் போன்றதாகும்....''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''உள்ளம் எனும் ஆற்றிலிருந்தும் சிறு சிறு கால்வாய்கள் பிரிகின்றன. உதாரணமாக, நாக்கு போன்றவை. நாக்கு உள்ளது;

கை உள்ளது. இவைகளின் மூலம் நடைபெறும் பணிகளின் தாக்கம் உள்ளத்தில் ஏற்படுகிறது. சின்ன வாய்க்காலின் தண்ணீர் அசுத்தமாக இருக்குமென்றால் பெரிய ஆற்றின் தண்ணீரும் அசுத்தமாகத்தான் இருக்கும் என்று கணிக்க இயலும். எனவே, ஒருவரின் நாவு அல்லது கை, கால்கள் தூய்மையாக இருக்கிறதென்றால் அவருடைய உள்ளமும் அவ்வாறே உள்ளது என்று கருதிக் கொள்ளுங்கள்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 321; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒருவரது நாவு தீயதாக உள்ளதென்றால் நோன்பு வைத்து கொண்டே சண்டை சச்சரவு மற்றும் ஏச்சுப் பேச்சுக்களிலிருந்து விலகி இருப்பதில்லையோ அல்லது அவரது கைகளினால் தவறான காரியங்கள் நிகழ்கின்றதென்றால் அவருடைய உள்ளமும் தூயதாக இல்லை எனப் புரிந்து கொள்ளுங்கள். மேலும், இது தக்வாவை விட்டு விலகியதாகும்.

பிறகு தமது வாழ்க்கையை எளிமையானதாக கழிக்க வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''தனது வாழ்க்கையை எளிமையில் கழிக்க வேண்டும் என்பது இறையச்சம் உடையவர்களுக்கான நிபந்தனையாகும். இது தக்வாவின் ஒரு கிளையாகும். இதன்மூலம் நாம் தகாத கோபத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.''

தேவையில்லாத கோபத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கோபம் சரியான சந்தர்ப்பச் சூழலுக்கேற்ப இருக்குமென்றால் அது ஆகுமானதாகும். ஆனால் தேவையில்லாமல் கோபப்படுவது சின்னச் சின்ன விஷயங்களில் கோபப்படுவது மற்றும் சண்டை சச்சரவுகள் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருங்கள்.



ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''ஆணவமும், அகங்காரமும் கோபத்தினால் தான் உருவாகின்றன.'' மனிதனிடம் அகங்காரம் இருப்பதனால்தான் கோபமும் வருகின்றது. தன்னைத்தானே ஒரு பொருட்டாகக் கருதுகிறான். பணிவு இருப்பதில்லை. ஏழ்மை இருப்பதில்லை. இதன் காரணமாகத்தான் கோபத்தின் நிலை உருவாகிறது. இந்த கோபம்தான் இன்றைய நாட்களில் உலகில் எல்லா இடங்களிலும் வீடுகளிலிருந்து பெரிய மட்டம் வரை எல்லா இடங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''மனிதன் தனது ஆன்மாவிற்குப் பிறரை விட முன்னுரிமை வழங்கும் போதுதான் கோபம் ஏற்படுகிறது. எனது ஜமாஅத்தினர் தங்களுக்குள் ஒருவர் மற்றவரை விட சிறியவர் பெரியவர் என எண்ணுவதை அல்லது ஒருவர் மற்றவர் மீது அகங்காரம் கொள்வதையும் இழிவாகப் பார்ப்பதையும் நான் விரும்பவில்லை. பெரியவர் யார்? சிறியவர் யார்? என்பதை அவன் அறிகின்றான். இது ஒரு வகையான எள்ளி நகையாடுதலாகும். எவனிடத்தில் எள்ளி நகையாடுதல் உள்ளதோ அந்த எள்ளி நகையாடுதல் ஒரு விதையைப் போன்று வளர்ந்து அவனுடைய அழிவிற்குக் காரணமாகி விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''சிலர் பெரியவர்களைச் சந்திக்கும் போது மிகவும் கண்ணியத்–துடன் நடந்து கொள்கின்றனர். ஆனால், எளியவரின் பேச்சை எளிமையுடன் கேட்பவரே பெரியவராவார். அவருடைய உள்ளத்திற்கு ஆறுதல் வழங்க வேண்டும். அவருடைய பேச்சிற்கு கண்ணியம் அளிக்க வேண்டும். எந்த மனங்கோணக்கூடிய பேச்சையும் நாவில் கொண்டு வரக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் ஒருவர் மற்றவரை பட்டப்பெயர் அல்லது தீய வார்த்தைகளைக் கூறி அழைக்காதீர்கள். இந்த செயல் தீயவர்களுடையதாகும்.''

பிறகு இறையச்சம் உடையவர் யார்? என்பதைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''மென்மையாகவும், எளிமையாகவும் நடப்பவரே இறையச்சமுடையராவார் என்பது இறை வேதத்திலிருந்து தெரிய வருகிறது. அவர்கள் அகங்காரமான முறையில் பேசுவதில்லை. சிறியவர்கள் பெரியவர்களிடம் பேசுவதைப் போன்று அவர்களுடைய பேச்சு இருக்கின்றது.''

இறையச்சம் உடையவர் யார்? ஒவ்வொருவரிடமும் ஒரு சிறியவன் பெரியவரிடம் பேசுவதைப் போன்று அவர்கள் பேசுவர். அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும், பெரியவராக இருந்தாலும் கூட அவர்களிடம் இந்தப் பண்பு காணப்படுகிறது. அதாவது, அவர்கள் மிகவும் பணிவுடன் பேசுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''எந்நிலையிலும் நாம் நமது வெற்றி எதில் உள்ளதோ அதையே செய்ய வேண்டும். அல்லாஹ் எவருக்கும் வேண்டப்பட்டவன் அல்ல. அவன் குறிப்பாக இறையச்சத்தை எதிர்பார்க்கின்–றான். எவர் இறையச்சத்தை மேற்கொள்வாரோ அவர் உயர்வான அந்தஸ்தை அடைவார். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் அல்லது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் யாரும் வாரிசு அடிப்படையில் கண்ணியத்தைப் பெறவில்லை.



பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: எவ்வாறு உண்மையான ஞானத்தைப் பெற முடியும்? உண்மையான ஞானம் மற்றும் உண்மையான அறிவை அல்லாஹ்வின் பக்கம் குனியாதவரை பெறவே முடியாது. எனவேதான், முஃமினின் ஞானத்தின் பார்வைக்கு அஞ்சுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் அவர் இறைவனின் ஒளியைக் கொண்டு பார்க்கிறார். சரியான ஞானப் பார்வை மற்றும் உண்மையான அறிவு இறையச்சம் கிடைக்காதவரை ஒருபோதும் கிடைக்காது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் வெற்றி பெற விரும்பினால் அறிவுடன் நடந்து கொள்ளுங்கள். சிந்தியுங்கள். சிந்திக்குமாறு திருக்குர்ஆனில்

## வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் 52 அடையாளங்கள்!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1944-ல் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி நான்தான் என்று அறிவித்தார்கள். அந்த வருடத்தின் ஆண்டு மாநாட்டில் சொற்பொழிவு நிகழ்த்தும் போது, முன்னறிவிப்பின் தன்மை குறித்து 52 அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன என்று அவற்றை எடுத்துரைத்தார்கள். அவை பின்வருமாறு:

1) அவர் இறைவனின் வல்லமையின் அடையாளமாக இருப்பார்.
2) அவர் கருணையின் அடையாளமாக இருப்பார்.
3) இறை நெருக்கத்தின் அடையாளமாக இருப்பார்.
4) அவர் அருளின் அடையாளமாக இருப்பார்.
5) அவர் இறைவனின் பேரருளின் அடையாளமாக இருப்பார்.
6) அவர் ஆற்றல்மிக்கவராக இருப்பார்.
7) அவர் மகிமைக்குரியவராக இருப்பார்.
8) அவர் செல்வம் நிறைந்தவராக இருப்பார்.
9) அவர் மஸீஹின் ந..ப்ஸைக் கொண்டவராக இருப்பார்.
10) உண்மையான ஆன்மாவின் பரக்கத்தால் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார்.
11) அவர் இறைவனின் வார்த்தையாக இருப்பார்.
12) இறைவனின் கருணையும் தன்மான உணர்வும் அவரை தனது மகிமைமிக்க வார்த்தைகளுடன் அனுப்பும்.
13) அவர் மிகுந்த புத்திக்கூர்மை உள்ளவராக இருப்பார்.
14) அவர் மிகுந்த புரியும் திறன் கொண்டவராக இருப்பார்.
15) அவர் மென்மையான உள்ளம் கொண்டவராக இருப்பார்.
16) அவர் வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார்.
17) அவர் அந்தரங்க அறிவுகளால் நிரப்பப்படுவார்.
18) அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார்.
19) திங்கட்கிழமையுடன் அவருக்கு குறிப்பான தொடர்பு இருக்கும்.
20) அவர் பாசமிக்க புதல்வராக இருப்பார்.
21) கண்ணியத்திற்குரியவராகவும், மேன்மைக்குரியவராகவும் இருப்பார்.
22) அவர் ஆரம்பத்தை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
23) அவர் இறுதியை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
24) அவர் உண்மையை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
25) அவர் உயர்வை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
26) அல்லாஹ் வானத்திலிருந்து இறங்கியது போல் என்ற கூற்றுக்குப் பொருத்தமானவராக அவர் இருப்பார்.
27) அவரது வருகை மிகவும் அருளுக்குரியதாக இருக்கும்.
28) அவரது வருகை இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும்.
29) அவர் ஒளியாக இருப்பார்.
30) அவர் இறை திருப்தியின் நறுமணத்தால் நறுமணம் கமழும் படி செய்யப்பட்டிருப்பார்.
31) இறைவன் தனது ஆவியை அவர் மீது இடுவான்.
32) இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும்.
33) அவர் மிக விரைவாக வளர்வார்.
34) அவர் கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார்.
35) அவர் பூமியின் எல்லைகள் வரை பிரசித்திப் பெற்று விடுவார்.
36) சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும்.
37) அவர் தனது இறுதி நோக்கத்தை அடைந்து விண்ணின் பக்கம் உயர்த்தப்படுவார்.
38) அவர் காலதாமதமாக வருபவராக இருப்பார்.
39) அவர் தொலைவிலிருந்து வருபவராக இருப்பார்.
40) தூதர்களின் பெருமையாக அவர் திகழ்வார்.
41) அவரது வெளிப்படையான அருள்கள் பூமி முழுவதும் பரவி விடும்.
42) அவரது அந்தரங்கமான அருள்கள் பூமி முழுவதும் பரவி விடும்.
43) யூஸு..பைப் போன்று அவரது மூத்த சகோதரர்கள் அவர்களை எதிர்ப்பார்கள்.
44) அவர் பஷீருத் தௌலாவாக, ஆட்சி தொடர்பான நற்செய்திகளைக் கூறுபவராக இருப்பார்.
45) அவர் திருமணங்கள் முடிப்பவராக இருப்பார்.
46) அவர் ஆலமே கபாப் ஆக இருப்பார். (அதாவது அவரது காலத்தில் பெரும் பெரும் போர்கள் நடைபெறும்.)
47) அவர் அழகிலும், நன்மைகள் செய்வதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இணையானவராக இருப்பார்.
48) அவர் கலிமத்துல் அஸீஸ் - பிரியமான வார்த்தையாக இருப்பார்.
49) அவர் இறை வார்த்தைகளைக் கொண்டவராக இருப்பார். (கலிமத்துல்லாஹ் கான்)
50) அவர் மார்க்கத்தின் உதவியாளராக இருப்பார்.
51) அவர் மார்க்கத்தை வெற்றி பெறச் செய்யக் கூடியவராக இருப்பார்.
52) அவர் இரண்டாவது பஷீராக இருப்பார்.

(ஜுமுஆ குத்பா 18.02.2011)

மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஒரு பக்கம் ஒருவர் தனது அறிவைத் தவறாக பயன்படுத்தினால் அது அவரின் அழிவிற்குக் காரணமாகி விடும். மறுபக்கம் அல்லாஹ் கூறுகிறான்: அறிவைப் பயன்படுத்துங்கள். சிந்தியுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வலியுறுத்தி இதனைக் கூறியுள்ளார்கள். திருக்குர்ஆனில் இந்த விஷயம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனை சிந்தியுங்கள். அது அல்லாஹ்வின் வேதமாகும். அது மூடப்பட்ட புத்தகமாகவும் இருக்கிறது. திறந்த புத்தகமாவும் இருக்கிறது. அதன் மறைவான விஷயங்களை அறிய முயற்சி செய்யுங்கள். அதன் பொருளையும் படியுங்கள். விளக்கத்தைப் படியுங்கள். ரமலான் நாட்களில் திருக்குர்ஆன் (அதிகமாக) ஓதப்படுகிறது. அத்தோடு தர்ஸும் கொடுக்கப்படுகிறது. அதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

(தொகுப்பு: A. அப்துல் நிஸார்)




அஸ்ஸலாமு அலைக்கும்.

This week with Huzoor நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். அமெரிக்காவைச் சேர்ந்த மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்கள் 06.01.2025 திங்கட்கிழமை அன்று ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களைச் சந்தித்த நிகழ்ச்சியை வழங்குவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

அன்பான ஹுஸூர் அவர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)


திங்கட்கிழமை, அமெரிக்காவின் வர்ஜீனியாவைச் சேர்ந்த குத்தாம், ஹஸ்ரத் அமீருல் மு'மினீன் அவர்களைச் சந்திக்கக் கூடிய நல்வாய்ப்பு பெற்றார்கள். இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சந்திப்பிற்காக குத்தாம் குழுவினர் குறிப்பாக பயணம் மேற்கொண்டு சென்றிருந்தனர். அனைத்து குத்தாமும் ஹுஸூர் அவர்களுடன் பேசவும் தங்களை அறிமுகப்படுத்த-வும் வாய்ப்பு கிடைத்தது. கலந்து கொண்டவர்கள் தங்கள் மார்க்க நம்பிக்கை தொடர்பாகவும், சம காலப் பிரச்சினைகள் தொடர்பாகவும் பல்வேறு கேள்விகளைக் கேட்கவும் வாய்ப்பு கிடைத்தது.

**எனது கேள்வி** என்னவென்றால், நல்லவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் நேர்மையாளர்களாகவும் இருக்க மார்க்கம் தேவையில்லை என்று பலர் கூறுகிறார்கள். அன்பான ஹுஸூர் அவர்களே! இது ஏன் உண்மை இல்லை என்பதையும், சரியான பாதையில் இருக்க மார்க்கம் ஏன் தேவை என்பதையும் விளக்க முடியுமா?

**பதில்:** சில நாட்களுக்கு முன்புதான் ஒரு கேள்விக்கு பதிலளித்தபோது, நல்லொழுக்கம் உள்ளவர்கள் மார்க்கவாதி-களாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டேன். தம்மைத் தாமே முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்ளும் முஸ்லிம்கள் பலர் இருக்கிறார்கள், ஆனால் இன்று முஸ்லிம்களின் செயல்களைப் பாருங்கள். அவர்களின் ஒழுக்கம் நல்லவிதமாக இருப்பதில்லை. இவர்களை விட சில நாத்திகர்கள் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக இருக்கிறார்-கள். இஸ்லாத்தைப் பின்பற்றாதவர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அல்லது எந்த மதத்தையும் பின்பற்றாத சிலர் நல்ல ஒழுக்கங்களைக் கொண்டுள்ளனர். அசல் விஷயம் என்னவென்றால், இஸ்லாமோ அல்லது மார்க்கமோ ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுப்பதில்லை என்று கூறுவது சரியல்ல! இந்த உலகில் வந்த ஒவ்வொரு நபியும் நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொடுத்துள்ளார். அனைவரிடத்திலும் காணப்படும் சில பொதுவான போதனைகள் உள்ளன. கடவுள் ஒருவன். அவனை வணங்க வேண்டும் என நம்புவது, மற்றவர்களுடன் நல்ல விதத்தில் நடந்து கொள்வது போன்றவை. இது கிறிஸ்தவத்திலும் உள்ளது. யூத மதத்திலும் உள்ளது. இது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் போதனையும் ஆகும். இது பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையும், இஸ்லாத்தின் போதனையும் ஆகும். எனவே, ஒவ்வொரு நபியும் கற்றுக் கொடுத்துள்ளார் என்று கூறும்போது ஒவ்வொரு ஒழுக்கமும் மார்க்கங்களில் இருந்துதான் வருகிறது என்பது நிரூபணமாகிறது. எனவே, யாரெல்லாம் நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொண்டார்களோ அவர்கள் மார்க்கத்தில் இருந்துதான் கற்றுக் கொண்டுள்ளார்கள் என்று நாம் கூறலாம். நாங்கள் இறைவனையும் மதத்தையும் நம்பவில்லை என்று அவர்கள் கூறுவார்கள் என்றால் அது முற்றிலும் வேறு விஷயம் ஆகும். உண்மை என்னவென்றால், நல்லொழுக்கங்களைக் கொண்ட எந்த மதத்தையும் நம்பாதவர்கள் பிறக்கத்தான் செய்கிறார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் மார்க்கத்தை நம்பினால், என்னுடைய உரிமைகளை நிறைவேற்றினால்,

அத்துடன் நல்ல ஒழுக்கங்களையும் கொண்டிருந்தால் உங்களுக்கு பன்மடங்கு வெகுமதி அளிப்பேன் என்று கூறுகிறான். அதனால்தான் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: எவர்கள் வெளிப்படையாக மதத்தை நம்புபவர் -களாக இருந்து கொண்டு, தொழுபவர்களாக இருந்து கொண்டு, பிறகு ஏழைகளின் உரிமைகளை நிறைவேற்றாம -லும், உண்மை பேசாதவர்களாகவும், சண்டைகளில் ஈடுபடுபவர்களாகவும், மற்றவர்களின் உரிமைகளைப் பறிப்பவர்களாகவும் இருப்பார்களோ அவர்களின் இறைவணக்கத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அவர்களை நரகத்தில் போட்டு விடுவேன் என்று கூறியுள்ளான். ஆகவே, மார்க்கத்தை நம்புவது மட்டும் போதாது. மாறாக, நல்லொழுக்கங்களும் மிக முக்கியமானவை என்று அல்லாஹ் அனைத்தையும் கூறி விட்டான்.




அல்லாஹ்வுக்குரிய உரிமைகள் இருப்பது போலவே, அடியார்களின் உரிமைகளும் உள்ளன. அல்லாஹ், இந்த உரிமைகளை நிறைவேற்றச் சொல்கிறான். ஒருவர் அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றவில்லை என்றால், ஒருவர் தம்மைப் பொருத்தவரை எனக்கான உரிமையை நிறைவேற்றி வருகிறார் என்றாலும் நான் அதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். எனவே, மார்க்கம் நம்மை சீர்கெடுத்து விட்டது என்று சொல்பவர்களிடம், மார்க்கத்தின் அடிப்படை போதனைதான் உங்களிடத்தில் நல்லொழுக்கங்களை உருவாக்கியுள்ளது என்று கூறவும். அப்படிபட்ட மக்கள் படிப்படியாக தங்கள் மதத்தின் போதனையை விட்டு விட்டு, அதிலிருந்த நல்லொழுக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டது வேறு விஷயம். ஆனால், மார்க்கத்தை நம்புபவராகவும் நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பவராகவும் இருப்பவருக்கு உண்மையான வாழ்க்கை மறுமை வாழ்க்கை என்று நாம் நம்புகிறோம். அப்படிப்பட்டவருக்கு மறுமையில் அல்லாஹ் பன்மடங்கு வெகுமதி அளிப்பான். மார்க்கத்தை நம்பாதவர்களுக்கு இந்த வெகுமதி வழங்கப்படாமல் போகலாம் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்களோ மறுமை வாழ்க்கையின் மீது அதிக நம்பிக்கை கொண்டுள்ளோம். ஒருவர் 80 அல்லது 100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த உலகத்தை விட்டுச் சென்று விடுவார். ஒருவர் அதிகபட்சமாக 100 வயது அல்லது 105 வயது வரை வாழலாம். நேற்று, உங்கள் முந்தைய ஜனாதிபதிகளில் ஒருவரான ஜிம்மி கார்ட்டர் 100 வயதில் காலமானார்.

இதை விட நீண்ட காலம் வாழ்பவர்கள் மிகக் குறைவு. இல்லையெனில், பொதுவாக மக்களின் ஆயுட்காலம் 80 முதல் 90 ஆண்டுகள் வரை உள்ளது. எனவே, மறுமையில் அப்படிப்பட்டவருக்கு அல்லாஹ் அதிக வெகுமதி அளிப்பான். இதுதான் எங்கள் கண்ணோட்டம். நாங்கள் மார்க்கத்தை நம்புபவர்கள் இறைவனை நம்புபவர்கள் மறுமையை நம்புபவர்கள்.

ஆகவே, நாம் மார்க்கத்துடன் நல்ல ஒழுக்கங்களையும் கொண்டிருக்க வேண்டியது அவசியம் ஆகும். நான் முஸ்லிம் ஆவேன் தொழுகிறேன் என்று கூறினால், நான் உன் தொழுகையை முகத்தில் வீசுகிறேன் என்று அல்லாஹ் கூறுகிறான். எனவே, அல்லாஹ்வே இதைக் கூறி விட்டான். அல்லாஹ் தொழுபவர்களை மட்டுமே மன்னிப்பான். மற்றவர்களை மன்னிப்பதில்லை என்று நாம் ஒருபோதும் கூறவில்லை. நல்ல செயல்களைச் செய்தால் அவன் உங்களை மன்னிப்பான். அல்லாஹ், எல்லாம் வல்லவன், அவன் எஜமானன் ஆவான். நீதிபதி அல்ல. அவன் எப்போதும் நீதி வழங்கியே ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மாறாக, யாராவது நல்ல செயல்களைச் செய்திருந்தால் அவர்களை அவன் மன்னிக்க விரும்பினால் மன்னிக்க முடியும்.

அன்பான ஹுஸூர் அவர்களே! **எனது கேள்வி** என்னவென்றால், நமது நெருங்கிய உறவினர்கள் அஹ்மதிகள் இல்லையென்றால், அவர்கள் மீது நமக்கு என்ன பொறுப்புகள் உள்ளன? அவர்கள் அஹ்மதியத்தின் உண்மைத்தன்மையை ஏற்றுக் கொள்வதற்கு துஆவுடன் அவர்களுக்கு எவ்வாறு புரிய வைக்க முடியும்?

**பதில்:** உண்மை என்னவென்றால், மார்க்கத்தில் எந்தக் கட்டாயமும் இல்லை. எந்தப் பலவந்தமும் கிடையாது! அஹ்மதி அல்லாத உறவினர்கள் உங்களுடன் நல்ல உறவைக் கொண்டிருந்தால் அவர்கள் உங்களை நல்லவர் என்று கருதுவதன் அடிப்படையில்தானே அவ்வாறு செய்கிறார்கள். சில அஹ்மதியல்லாத உறவினர்கள், நீங்கள் அஹ்மதி ஆகிவிட்டீர்கள். ஆகவே நாங்கள் உங்களைப் புறக்கணிக்கிறோம் என்று கூறுகிறார்கள். அவர்கள் உங்களுடன் பேசுவதில்லை. உங்களுக்கு எதிராகப் பேசுகிறார்கள். உங்களுக்கு நஷ்டம் விளைவிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால், உங்களுடன் ஏதேனும் உறவினர் தொடர்பு வைத்திருக்கிறார் என்றால், அவருடைய இயல்பு நல்லதாக உள்ளது என்று அர்த்தம். எனவே நீங்கள் அவர்களுடன் நட்பையும் தொடர்பையும் பேணுங்கள். இஸ்லாமிய போதனைகளின்படி, உங்கள் நல்ல ஒழுக்கங்களை அவர்களுக்குக் காட்டுங்கள். தற்போது ஒழுக்கங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு எங்கெல்லாம் உதவி தேவைப்படுகிறதோ உதவுங்கள். அவர்களுக்குப் பயன்படுங்கள். அவர்களுக்காக துஆ செய்யுங்கள். எனவே, அவர்கள் உங்கள் நடத்தையையும், அவர்களுடனான அணுகுமுறையையும் பார்க்கும்போது, நீங்கள் நல்லவர்கள் என்பதை அவர்கள் உணர்வார்கள். பிறகு படிப்படியாக ஒரு காலம் வரும். அல்லாஹ் அவர்களின் உள்ளங்களைத் திறப்பான். அவர்களும் அஹ்மதிகளாக மாறுவார்கள்.

உங்கள் நெருங்கிய உறவினர்களான முஸ்லிம்களை மட்டும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ்

கூறவில்லை. உங்கள் நெருங்கிய உறவினர்களைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்றே அல்லாஹ் கூறியிருக்கிறான். உங்கள் இரத்த உறவுகளைக் கவனித்துக் கொள்ளுங்கள். மேலும், உங்கள் மனைவியின் இரத்த உறவுகளையும் கவனித்துக் கொள்ளுங்கள். எனவே நீங்கள் இவ்வாறு நடந்து கொள்ளும்போது, அது யாராக இருந்தாலும், நீங்கள் இதைச் செய்யும்போது, அது நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் அந்தச் சூழலில் அமைதியும் பாதுகாப்பும் நிலைபெறும். படிப்படியாக ஒரு காலம் வரும். அவர்கள் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நற்பாக்கியத்தில் எழுதப்பட்டிருந்தால், அவர்கள் அவ்வாறு செய்வார்கள். இல்லையென்றால், குறைந்தபட்சம் உங்கள் ஒழுக்கங்களுக்கு உங்களுக்கு வெகுமதி கிடைக்கும்.

அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களே! அஸ்ஸலாமு அலைக்கும்.

தொழுகை இஸ்லாத்தின் ஒரு முக்கிய அம்சமாகும் என்று தாங்கள் இதற்கு முன்பு பல முறை கூறியிருக்கிறீர்கள். **என்னுடைய கேள்வி** என்னவென்றால், தொழுகையில் முழு கவனம் செலுத்துவதற்கு ஏதேனும் முறையோ அல்லது உத்தியோ உள்ளதா? சோம்பேறித்தனம் ஏற்படும் போது சரியான நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்த ஏதேனும் வழிமுறை உள்ளதா?

**பதில்:** விஷயம் என்னவென்றால், நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும், அதைச் செய்ய உங்களுக்கு மன விருப்பம் இருப்பதால் அதைச் செய்கிறீர்கள். நாம் ஏன் தொழ வேண்டும்? அது ஏதேனும் நோக்கத்திற்காக மட்டும்தானா? மனிதனுக்கு இரண்டு விஷயங்கள் உள்ளன: முதலாவது, ஒரு இலக்கை அடைய ஒருவர் வேலை செய்கிறார். இரண்டாவது, ஒருவர் மற்றொரு நபரை நேசித்தால், அவரின் அன்பைப் பெறுவதற்காக அவர் அதற்காக ஏதாவது செய்கிறார். ஒரு நபர் தனது பெற்றோர் சொல்வதைக் கடைப்பிடித்தால், பணம் பெறுவதற்காகவோ, உடைகள் பெறுவதற்காகவோ அல்லது இரவில் தனது தாயார் உணவளிக்கமாட்டார் என்பதற்காகவோ அதைச் செய்வதில்லை. அன்பைக் காட்டாவிட்டாலும் தாய் உணவு கொடுப்பாள். நீங்கள் உங்கள் தாயை நேசிக்கிறீர்கள், உங்கள் தந்தையை நேசிக்கிறீர்கள். அவர்கள் உங்களை கவனித்துக் கொள்கிறார்கள் என்பதால். ஒருவர் தனது தந்தையை இதன் காரணமாகத்தானே நேசிக்கிறார்.

தாய் தந்தையரை விட அதிகமாக இறைவனை நேசிக்க வேண்டும். நீங்கள் இறைவனை நேசிக்கும்போது, நீங்கள் இயல்பாகவே அவனை வணங்குவீர்கள். பின்னர் உங்களுக்கு இறைவணக்கத்தின் சிந்தனையும் வரும். சிந்தனை வரும்போது நீங்கள் தொழுவதின் பக்கம் கவனம் செலுத்துவீர்கள். ஏனெனில், "நான் ஜின்களையும் மனிதர் -களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்" என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.

இறைவணக்கத்தினால் எனக்கு எந்தப் பயனும் இல்லை. உங்களுக்குத்தான் பயன் என்று அல்லாஹ் கூறுகிறான். இதற்கான எந்த நன்மையும் எனக்கு கிடைப்பதில்லை. உங்களுக்குத்தான் கிடைக்கிறது என்று அல்லாஹ் கூறுகிறான்.

எனவே, அல்லாஹ் உங்களுக்கு வெகுமதி அளிப்பான். மேலும் உங்கள் சிறிய முயற்சிக்காக அவன் பெரிய வெகுமதியை வழங்குகிறான். இதைத் தவிர மறுமையின் வெகுமதியையும் வழங்குகிறான். அல்லாஹ் நம்மைப் படைத்துள்ளான். அவன் நமக்கு இந்த அருட்கொடைகளை -யெல்லாம் அளித்துள்ளான். அவன் நமக்கு இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளான். அவன் நமக்கு பெற்றோர்களைக் கொடுத்துள்ளான். என் செலவுகளுக்கு பணம் செலுத்தும் நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியுள்ளான். படிப்பதற்கு எனக்கு நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. எனக்கு இதுபோன்ற வசதிகள் கிடைத்துள்ளன. நான் அமெரிக்காவில் இருந்து கொண்டு படிக்கிறேன். எனக்கு நல்ல வேலை கிடைத்துள்ளது அல்லது நல்ல வேலை எனக்கு கிடைக்கும். ஏனென்றால் அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.



எனக்கு நன்றி செலுத்தினால் நான் உங்களுக்கு இன்னும் அதிகமாக வழங்குவேன் என்று அல்லாஹ் கூறுகிறான். எனவே ஒருவர் நன்றியுள்ளவராக ஆகும்போது, அதை வெளிப்படுத்தும்போது, நன்றி உணர்வை வெளிப்படுத்த நீங்கள் உங்கள் நன்றியைத் தெரிவிக்க விரும்பினால், நீங்கள் என்னிடம் ஐந்து முறை வர வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஐந்து முறை நீங்கள் வந்தால், நான் உங்களுக்கு வெகுமதியை இன்னும் அதிகரிப்பேன் என்று அல்லாஹ் கூறுகிறான்.

எனவே, நாம் அல்லாஹ்வை நேசிக்க வேண்டும் என்ற மனநிலையை நீங்கள் கொண்டு வர வேண்டும்.

நாம் அல்லாஹ்வை நேசிக்கும்போது, நாம் அவனை வணங்குவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்: நீங்கள் கடமையாக நினைத்துக் கொண்டு அவசரமாகத் தொழுகையை நிறைவேற்றினால், தனக்கு இது தேவையில்லை என்று அல்லாஹ் கூறுகிறான். தொழுகையின் உரிமைகளை நிறைவேற்றாதவர்களின் தொழுகைகளை நான் திரும்ப அனுப்பி விடுகிறேன் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.

ஒருபுறம் மக்களின் உரிமைகளை நிறைவேற்ற மாட்டார்கள். மற்றொன்று அவர்கள் சோம்பேறித்தனமாக தொழுகைக்காக நிற்கிறார்கள். அவர்கள் அதை ஒரு சுமையாகக் கருதுகிறார்கள். அல்லது தாய் கூறியதால் தொழுகிறார்கள். தாயுக்கு காட்டுவதற்காக தொழுகிறார்கள். அல்லது தந்தை தொழச் சொன்னதால் தொழுகிறார்கள். அல்லது குத்தாமுல் அஹ்மதிய்யா இன்று கூட்டம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. எனவே கூட்டத்திற்குச் செல்லும்போது அங்கு மக்ரிப் மற்றும் இஷா தொழுகையைத் தொழுது விடலாம் என்று கருதுகிறார்கள். அல்லது ஜுமுஆ தொழுவது கட்டாயம் என்று தொழுகிறார்கள்.

அல்லாஹ்வின் மீதான நேசத்தை உங்கள் உள்ளங்களில் ஏற்படுத்துங்கள். பின்னர் தொழுகையில் இன்பத்தைக் காண்பீர்கள். உங்கள் தாய் தந்தையரை விட என் மீது அதிக அன்பு வையுங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

ஆகவே அதிகமாக இஸ்திக்.:.பார் செய்யுங்கள். அல்லாஹ்வே! உன் அன்பை வழங்குவாயாக என்று தொழுகையில் துஆ செய்யுங்கள். அப்போதுதான் ஒருவர் உண்மையான நம்பிக்கை கொண்டவராக ஆகிறார்.

ஜஸாக்கல்லாஹ் ஹுஸூர்.

**எனது கேள்வி** என்னவென்றால், உலகின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, வரும் காலங்களில் மேற்கத்திய நாடுகளில் வாழும் முஸ்லிம்களின் வாழ்க்கை கடினமாகி விடும் என்றும், மேற்கில் வழங்கப்படும் சுதந்திரங்கள் நம்மிடமிருந்து பறிக்கப்படும் என்றும் தாங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** இதைப் பற்றி நான் பலமுறை பேசியிருக்கிறேன். இதைப் பற்றி பலமுறை பலர் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். இஸ்லாம் முன்னேற வேண்டுமென்றால், அது அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமாகவே நடக்கும். ஆகவே, அஹ்மதிய்யா ஜமாஅத்திற்குப் பெரும் ஆபத்து உள்ளது. சிலர் இஸ்லாத்திற்கு எதிராகவும், இறுதியில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராகவும் நிற்கும் ஒரு காலம் வரும். அது நிகழும் முன் நீங்கள் ஒரு புரட்சிகர மாற்றத்தைக் கொண்டு வராவிட்டால், அந்தப் பகைமைகள் வளர்ந்து முன்னேற வாய்ப்புள்ளது. வெற்றி கிடைக்கும்போது எதிரிகளும் அதிகரிப்பார்கள் என்பது வெளிப்படை!

மேலும் இந்த பகைமை மேற்கத்திய நாடுகளுக்கும் பரவும். உண்மையில், அவர்கள் எப்போதும் ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். கிலா.:.பத்துக்கு ஏதேனும் தீங்கு விளைவிக்கலாம் என்று அவர்களின் சிந்தனைகளில் இவ்விஷயங்கள் உள்ளன. அதற்காக அவர்கள் வெவ்வேறு தந்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள், மக்களுக்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கிறார்கள், எதிர்ப்பை எழுப்புகிறார்கள். எல்லா வகையான பரப்புரைகளையும் செய்கிறார்கள். அமெரிக்காவில் நீங்கள் இதை நன்கு அறிவீர்கள். ஏனெனில் அங்கு ஏராளமான பரப்புரைகள் செய்யப்படுகின்றன. அவர்கள் அதற்குப் பிறகு என்ன செய்வார்கள் என்பதை அல்லாஹ்வே நன்கு அறிவான்.

> “இஸ்லாத்திற்கு எதிராக எதிர்ப்புக் குரல் வரும் முன்பே நாம் யார் என்பதை அறிமுகப் -படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்ப்புக்கு முன் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்னவென்றால், நாங்கள் அமைதியை விரும்பும் மக்கள் ஆவோம். எங்களுக்கு எந்தவொரு மறைமுக நோக்கங்களோ, குறிக்கோளோ கிடையாது. எங்களது ஒரே குறிக்கேள் அல்லாஹ்வை நீங்கள் அடையாளம் கண்டு கொள்வதுதான். நாங்கள் அதிகாரத்தை வேண்டவில்லை என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.”

ஆனால், அது நிகழும் முன், நம்முடைய சரியான முயற்சிகள் இருக்கும் என்றால், அல்லாஹ்வின் அருள் இருக்கும் என்றால், துஆ இருக்கும் என்றால் அல்லாஹ் இதிலிருந்து நம்மைக் காப்பாற்றவும் முடியும்! எனவே, நாம் பாடுபட வேண்டும். அதனால்தான் இப்போதிலிருந்தே நமது தூதுச்செய்தியை எல்லா இடங்களிலும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று நான் சொல்கிறேன். 45,000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்ட பிறகு, மேற்கத்திய நாடுகளில் சில இடங்களில், இன்னும் கூறுவதென்றால் யூதர்கள், கிறிஸ்தவர்கள், நாத்திகர்கள் உட்பட அனைத்து மக்களிடமும் இது அநீதி என்றும் இனப்படுகொலை என்றும் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளது. அவர்கள் இஸ்ரேலுக்கு எதிராகப் பேசத் தொடங்கியுள்ளனர். ஆனால் 30, 40 ஆயிரம் பேர் கொல்லப்படாதவரை யாரும் குரல் எழுப்பவில்லை! 70 சதவீதம் குழந்தைகள் இறந்து விட்டனர். எனவே, அதேபோல், இஸ்லாத்திற்கு எதிராக இதுபோன்ற அநீதிகள் நிகழ்த்தப்படும் வரை மக்கள் இறக்கத் தொடங்கும் வரை காத்திருப்பதை விட இந்த மக்களிடமிருந்து எதிர்ப்புக் குரல் வரும் முன்பே நாம் யார் என்று அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். அதனால்தான் நீங்கள் உங்கள் நாடுகளில் தப்லீக் செய்ய வேண்டும் அல்லது குறைந்தபட்சம் அஹ்மதிய்யத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நான் கூறுகிறேன். 15 முதல் 20 ஆண்டுகளுக்கு முன்பு,

மக்கள் தொகையில் 10 சதவீதத்தினருக்கு இந்தச் செய்தியை தெரிவிக்க நான் அறிவுறுத்தியிருந்தேன். நீங்கள் அப்போது அப்படிச் செய்யத் தொடங்கியிருந்தால், இப்போது இன்னும் பலருக்கு நம்மை அறிமுகப்படுத்தியிருப்போம். நீங்கள் Virginia-வில் வசிக்கிறீர்கள். அங்குள்ள மக்கள் தொகையில் இரண்டு சதவீதத்தினருக்குக் கூட அஹ்மதிகள் யார் என்பது பற்றித் தெரியாது என்று நான் கருதுகிறேன். நீங்கள் அங்கு முபாரக் பள்ளிவாசலையும், மஸ்ரூர் பள்ளிவாசலையும் கட்டியுள்ளீர்கள். பல பெரும் பெரும் பணிகளைச் செய்துள்ளீர்கள். உங்கள் நிகழ்ச்சிகளுக்கு அக்கம் பக்கத்தார்களையும் அழைக்கிறீர்கள். ஆனால் எத்தனை பேர் உங்களை அறிவார்கள்? ஆகவே இது நடந்தே தீரும்! ஆனால் இந்த எதிர்ப்புக்கு முன் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்னவென்றால், நாம் நம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு முன்பே, நாங்கள் அமைதியை விரும்பும் மக்கள் ஆவோம். எங்களுக்கு எந்தவொரு மறைமுக நோக்கங்களோ, குறிக்கோளோ கிடையாது. எங்களது ஒரே குறிக்கோள் அல்லாஹ்வை நீங்கள் அடையாளம் கண்டு கொள்வதுதான். நாங்கள் அதிகாரத்தை வேண்டவில்லை.

மற்றவர்கள் ஆட்சிக்கு வந்து தங்கள் உரிமைகளைப் பறித்து விடக்கூடாதே என்று அரசியல்வாதிகளும் உலக மக்களும் அஞ்சுவதுண்டு! எங்களுக்கு அத்தகைய இலட்சியங்கள் எதுவும் கிடையாது. நாங்கள் மார்க்கத்தை நம்புகிறோம். மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்கிறோம். மற்றபடி ஆட்சி அதிகாரம் உங்கள் வசமே இருக்கட்டும் என்று அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். இதை அவர்கள் உணர்ந்து கொண்டால் அவர்களின் பகைமை ஓரளவு குறையக்கூடும். ஆனால், எவ்வாறிருப்பினும் ஜமாஅத்திற்கு முன்னேற்றம் கிடைக்கும்போது பகைமை தவிர்க்க முடியாததாக ஆகிவிடும். இதை ஜமாஅத்தின் முன்னேற்றத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும். நீங்கள் பிரச்சாரம் செய்யும்போது, மக்கள் நமது எண்ணிக்கை அதிகரித்து வருவதைப் பார்க்கும்போது பகை இன்னும் அதிகரிக்கும்.

ஒரு சில பாக்கிஸ்தானியர்கள் அல்லது ஆப்பிரிக்க அமெரிக்கர்கள், வெள்ளை அமெரிக்கர்கள் அல்லது ஆசியாவைச் சேர்ந்த ஒரு சிலர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று கூறுகிறார்கள். நாம் ஒரு சிறிய இயக்கமாக இருப்பதால் அவர்களுக்கு அது பெரிய விஷயமாக தெரிவதில்லை. ஆனால், நான் ஏற்கனவே கூறியது போல், நாம் கிலா∴பத்தைப் பின்பற்றுவதால், நாம் ஒரு தலைமையகத்தை கொண்டிருப்பதால், அதற்கு கீழ்ப்படிந்து நடக்கிறோம் போன்ற விஷயங்களை அவர்கள் தம் மனதில் வைத்திருக்கிறார்கள். ஆகவே, இவர்களின் தலைமையகத்தை குறிவைக்க வேண்டும் என அவர்கள் நினைக்கலாம். உலக மக்களாகிய இவர்களுக்கு தொலைநோக்கு பார்வை உள்ளது. 30 வருடங்களுக்குப் பிறகுள்ளதை அவர்கள் திட்டமிடுகிறார்கள். ஆகவே, நாமும் அதே போன்று திட்டமிட வேண்டும்.

ஒரு வாழ்க்கைத் துணை மற்றொரு துணையிடம் சொற்கள் மூலமாக கடுமைகள் காட்டுவது இதுபோன்ற அநீதிகள் பெரும்பாலும் கண்டுகொள்ளாமல் விடப்படுகின்றது. ஆனால் இதற்கு நீண்டகால எதிர்மறை விளைவுகள் ஏற்படலாம்.

எனவே **எனது கேள்வி** என்னவென்றால், ஒரு நபர் அதை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும், மேலும் ஜமாஅத் அந்த நபருக்கு எவ்வாறு உதவ முடியும்? என்பதுதான்.

**பதில்:** இங்கு, ஒரு நபர் என்பது யாரைக் குறிக்கிறது? கணவனா மனைவியா? பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தம் கணவர் இவ்வாறு முறைகேடாக நடந்து கொண்டார் என்று மனைவிகள் சார்பாக எனக்கு புகார்கள் வருகின்றன. இதற்காக, ஜமாஅத் அவர்களுக்குப் புரிய வைக்கின்றது. அதனால்தான் இஸ்லாஹி கமிட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் பரஸ்பரம் மீண்டும் இணைய வேண்டும் என்பதே இதன் நோக்கம் ஆகும். இதை லஜ்னா மற்றும் குத்தாமுல் அஹ்மதிய்யா அவர்களுக்குப் புரிய வைக்கிறார்கள். கணவன்-மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் தங்கள் உரிமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கூறுகிறது. வாழ்க்கைத் துணைவர்களிடையே ஏன் பிரிவினை ஏற்படுகிறது? யாராவது என்னிடம் கேட்டால், எவரும் Perfect கிடையாது! இருவரும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் கூறுகிறேன். ‘நான் Perfect ஆவேன்; நீ தவறு’ என்று யாரும் சொல்ல முடியாது. அவர்களிடத்திலும் பலவீனங்கள் இருக்கும். உங்களிடத்திலும் இருக்கும்! அனைவருக்கும் சில குறைபாடுகள் இருக்கும். நீங்கள் மற்றவரின் பலவீனங்களைக் காணும்போது உங்கள் கண்கள், வாய் மற்றும் காதுகள் ஆகியவற்றை மூடிக்கொள்ளுங்கள். அப்போது நீங்கள் மகிழ்ச்சியாக வாழ முடியும். நீங்கள் குறைகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டே இருந்தால், பிரிவினை அதிகரிக்கும். அதிக அளவில் மோதல்களை உருவாக்கக் கூடாது. ஜமாஅத்திலும் இஸ்லாஹி கமிட்டிகள் உள்ளன. அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். ஒருவர் உண்மையான மு∴மினாக இருப்பார் என்றால், அவர்கள் கணவன் அல்லது மனைவியின் உரிமைகளை நிறைவேற்றுகிறார்கள் என்றால் பிறகு சண்டைகள் ஏன் நடக்கின்றன? தம்மைத் தாமே சரியானவராகக் கருதாதீர்கள். மனைவியின் உரிமைகளையும் நிறைவேற்றுங்கள். மனைவியும் கணவரின் உரிமைகளை



கணவன் மனைவி இருவரில், ஒருவர் தங்கள் சொந்த உரிமைகளைப் பெற வேண்டும் என்று இஸ்லாம் கூறவில்லை. ஒருவர் மற்றவர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. இருவருக்கும் இந்த மனநிலை இருக்கும்போது, எந்த மோதலும் இருக்க முடியாது.

நிறைவேற்ற வேண்டும். இது பரஸ்பர புரிதல் ஆகும். இருவருக்கும் இது இருக்க வேண்டும். பிரிவுக்கான மூல காரணம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொண்டு அதைத் தீர்க்க முயற்சி செய்யுங்கள். அந்தக் காரணத்தை நீங்கள்தான் நன்கு அறிவீர்கள். நீங்கள் ஜமாஅத்துக்கு வரும்போது, அவர்களிடம் எல்லாவற்றையும் சொல்ல மாட்டீர்கள். இவையெல்லாம் தன்னுடைய தவறு என்று யார் சொல்வார்? இது தம்முடைய தவறு என்று மனைவி எப்போது ஒப்புக் கொள்வாள்? இது அவருடைய தவறு என்று அவள் கூறுவாள். இது என் தவறு அல்ல; இது என் மனைவியின் தவறு என்று அவர் கூறுவார். பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவார்கள்.

பின்னர், வழக்குகள் தொடரப்படுகிறது. வழக்கு தொடங்கும்போது, அவை ஒருபோதும் முடிவடையாது. அதனால்தான் முதல் விஷயம் Understanding இருக்க வேண்டும்; இறையச்சம் இருக்க வேண்டும். இறையச்சத்தை ஏற்படுத்துங்கள். பின்னர், எல்லாம் சரியாகி விடும். பிறகு, ஜமாஅத்தின் இஸ்லாஹி கமிட்டியும், லஜ்னா மற்றும் குத்தாமுல் அஹ்மதிய்யாவும் திறம்பட செயல்பட முடியும்.

ஒருவர் தம் சொந்த உரிமைகளைப் பெற வேண்டும் என்று இஸ்லாம் கூறவில்லை. மாறாக, ஒருவர் மற்றவர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. இருவரிடத்திலும் இந்த மனநிலை உருவாகி விடும்போது எந்த மோதலும் ஏற்படாது.

**எனது கேள்வி** என்னவென்றால், ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் ஏதேனும் குறிப்பான துஆவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார்களா?

**பதில்:** பெருமானார் (ஸல்) அவர்களின் பல்வேறு துஆக்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அவ்வப்போது செய்து வந்தார்கள். அவற்றில் சிலவற்றை அல்லாஹ்வே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தான். அவற்றில் ஒன்று துரூத் ஷரீ.ஃப் ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் துரூத் ஷரீ.ஃப்பை அடிக்கடி ஓதுமாறு அறிவுறுத்தி வந்தார்கள். துரூத் ஷரீ.ஃப் மூலமாக நீங்கள் அல்லாஹ் வரை சென்றடைய முடியும் என்றும் பெருமானார் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள். மேலும், இதை ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மிகவும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். அதற்குப் பிறகு, ஹஸ்ரத் மு.ஃப்தி முஹம்மத் சாதிக் சாஹிப் அவர்கள், நான் ஒவ்வொரு தொழுகையிலும் வேறு துஆக்கள் செய்கிறேனோ இல்லையோ ஆனால் துரூத் ஷரீ.ஃப்பை கண்டிப்பாக ஓதுவேன் என்று கூறியபோது, இதை விட சிறந்த துஆ என்ன உள்ளது! இது நல்ல விஷயமாகும். நானும் அதைத்தான் ஓதுகிறேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்.

நேற்று என் சொற்பொழிவில் நான் இதற்கான உதாரணத்தைக் குறிப்பிட்டேன். அல்லாஹ்வின் வானவர்கள் ஒன்று கூடி, இவருக்கு இந்த அந்தஸ்து கிடைத்ததற்கான காரணம் இவர் இறைத்தூதர் (ஸல்) அவர்களை நேசிப்பதாலும், அவருக்கு துரூத் அனுப்புவதாலும்தான் என்று கூறினார்கள்.

இதன் பொருள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் துரூத் ஷரீ.ஃப்பை அதிகமாக ஓதி வந்தார்கள் என்பதாகும். இந்த துஆவினால்தான் அவர்களுக்கு எல்லாம் கிடைத்தது. துரூத் ஷரீ.ஃப்பை விட சிறந்த துஆ என்ன இருக்க முடியும்? இன்னும் பல துஆக்களையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அவ்வப்போது ஓதி வந்தார்கள். ஆனால் அசல் விஷயம் என்னவென்றால், உள்ளத்திலிருந்து துஆ வெளிப்பட வேண்டும் என்று அன்னார் கூறினார்கள். எனவே, அருள்களைப் பெறுவதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் கேட்கப்பட்ட துஆக்களை கண்டிப்பாக ஓதுங்கள், ஆனால் உண்மையான துஆ உங்கள் சொந்த மொழியில் நீங்கள் கேட்பதுதான்! குறிப்பாக தொழுகைகளில் உங்கள் மொழியில் துஆ செய்யுங்கள், ஏனென்றால் அதன் மூலமாக உள்ளுக்குள் இருந்து ஓர் உத்வேகம் பிறக்கிறது. உள்ளத்திலிருந்து வெளிப்படும் துஆ அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

குறுக்கு வழியில் செல்வது போன்று, ஏதேனும் ஒரு பீர் சாஹிப் இந்த ஒரு குறிப்பிட்ட துஆவைக் கேளுங்கள்; மன்னிக்கப்படுவீர்கள் என்று சொன்னால் நீங்கள் ஐவேளை தொழவில்லை என்றால் எந்த துஆவும் பயனளிக்காது! முதலில், நீங்கள் ஐந்து வேளை தொழுது அந்த நிலையை ஏற்படுத்துங்கள். பிறகு துஆக்களும் பயனளிக்கும்.



சந்திப்பு முடிந்ததும், குத்தாம், ஹஸ்ரத் கலீ.ஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடமிருந்து பேனாக்களை பரிசாகப் பெறும் நல்வாய்ப்பைப் பெற்றனர்.

திங்கட்கிழமை நடைபெற்ற ஒரு சந்திப்பின் தொகுப்பை நாம் கண்டோம்.

இப்போது ஜுமுஆ குத்பாவின் சுருக்கத்துடன் நாம் இந்த நிகழ்ச்சியை நிறைவு செய்வோம்.

இன்றைய ஜுமுஆ குத்பாவில், ஹுஸூர் அவர்கள் வக்.ஃபே ஜதீதின் 68-வது ஆண்டு துவங்கியதை அறிவித்தார்கள். குத்பாவின் இறுதியில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகெங்கிலும் உள்ள

அஹ்மதிகளுக்காகவும், உலகின் பொது நிலைக்காகவும் துஆ செய்யுமாறு கூறினார்கள். "இந்த 2025-ஆம் ஆண்டு ஜமாஅத்துக்கு அருள்களின் ஆண்டாக இருக்க வேண்டும் என்றும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஜமாஅத்தை எல்லாத் தீங்கிலிருந்தும் பாதுகாக்கட்டும். பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்புகளும் அவர்களின் குழுக்களும் அவ்வப்போது கொதித்தெழுந்து கொண்டே இருப்பார்கள். ஜமாஅத்தை எதிர்ப்பதில் சில இடங்களில் சட்டத்தின் பின்னால் இருந்து கொண்டு, அவர்கள் எல்லா வகையான கொடுமைகளையும் செய்ய முயற்சி செய்கின்றார்கள். (அங்கு) கல்லறைகளும் பாதுகாப்பாக இல்லை; வீடுகளும் பாதுகாப்பாக இல்லை. இந்த அநீதியாளர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் விரைவில் செய்வானாக. அஹ்மதிகளை அவன் தன் பாதுகாப்பில் வைத்திருப்பானாக. அவர்கள் ரப்வாவை நோக்கியும் தங்கள் பார்வையை இவர்கள் வைத்துள்ளனர். அல்லாஹ் அதையும் பாதுகாப்பானாக!

சில காலம் முன்பு, துருத் ஷரீ.ஃப் மற்றும் சில துஆக்களின் பக்கம் நான் கவனமூட்டினேன். அதன் பக்கம், பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகள் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். அவ்வாறே, உலகில் உள்ள ஒவ்வோர் அஹ்மதியும் கவனம் செலுத்துங்கள்.

பங்களாதேஷில் உள்ள அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் பயங்கரவாதிகளின் தீங்கிலிருந்து பாதுகாக்கட்டும். சிரியாவிலும் இப்போது ஒரு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. அங்கும் அல்லாஹ் அஹ்மதிகளை எல்லா வகையான தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக! தன் பாதுகாப்பில் வைப்பானாக!

இதேபோல் மற்ற நாடுகளும் உள்ளன. ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளும் உள்ளன. எல்லா இடங்களிலும் அல்லாஹ் அஹ்மதிகளை தன் பாதுகாப்பில் வைப்பானாக. இதற்காக குறிப்பாக துஆக்களைச் செய்வது ஒவ்வோர் அஹ்மதியின் மீதும் கடமையாகும். உங்களுடைய நாடுகளுக்காகவும், பாகிஸ்தானுக்கு வெளியில் வாழும் பாகிஸ்தான் அஹ்மதிகள் பாகிஸ்தானுக்காகவும், உலகின் பொதுவான நிலைக்காகவும், போர் சூழலுக்காகவும் துஆ செய்யுங்கள். அதன் தீய தாக்கங்களிலிருந்து அல்லாஹ் ஒவ்வோர் அப்பாவிகளையும், அநீதியிழைக்கப்பட்டவர்களையும் காப்பாற்றுவானாக.

இந்த மக்கள் புத்தாண்டை மிகுந்த ஆர்வத்துடன், பட்டாசுகள் வெடித்து கொண்டாடுகிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் தம் மகிழ்ச்சியை மட்டுமே பார்க்கிறார். மற்றவர்களின் வேதனையைப் பற்றி அவர்களுக்கு உணர்வு இல்லை. ஏழை மக்கள், ஏழை சமுதாயங்கள் அநீதிக்குள்ளான -வர்கள் மீது சக்திவாய்ந்த சமுதாயங்கள் அநீதியிழைத்துக் கொண்டே செல்கின்றன. இந்த ஆண்டில், அல்லாஹ், இந்த அனைத்து சக்திவாய்ந்த சமுதாயங்களின் திட்டங்களையும் மண்ணோடு மண்ணாக்குவானாக! அல்லாஹ்வின் ஏகத்துவம் இவ்வுலகில் நிலைநாட்டப்படுவதை நாம் காண்போமாக! அல்லாஹ் நமக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!"

**2.5% ZAKAT**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**தம்மை எனது ஜமாஅத்தில் இணைத்தவர்களாகக் கருதிக் கொள்பவர்களே! உண்மையாகவே தக்வாவின் வழிகளில் அடியெடுத்து வைக்கும்போதுதான் வானத்தில் நீங்கள் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவீர்கள். எனவே தங்களின் ஐவேளைத் தொழுகைகளை இறைவனை நீங்கள் பார்ப்பதைப் போல் அச்சத்துடனும் பணிவுடனும் நிறைவேற்றுங்கள். தங்களின் நோன்புகளை இறைவனுக்காக உண்மையுடன் நிறைவேற்றுங்கள். ஸக்காத் வழங்கத் தகுதியுடைய ஒவ்வொருவரும் ஸக்காத்தை வழங்குங்கள்.**

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam